# அரசு ஊழியர்

நவம்பர் 2019

மலர் : 40 இதழ் : 11

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன்,
இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## சூடா ஒரு கோப்பை சூப்

## தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவார்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

**- கவியரசு கண்ணதாசன்**

தலைவர் மடல்

# ‘அச்சே தின்’ ‘போயே போச்’

எந்த நாடு மனிதனை மறந்து மனிதத்தை மறந்து இனவெறியிலும் மதவெறி யிலும் மூழ்கித் திளைக்கிறதோ அது சுடுகாடாகிவிடும் என்ற உண்மையை நிரூபிக்கும் முயற்சியை செய்து கொண் டிருக்கிறது மத்திய அரசு. ஆரோக்கியமற்ற ஒரு சமூகத்தில் அமைதியற்ற ஒரு தேசத்தில் பொருளாதார வளர்ச்சி என்பதும் ஆரோக்கியமற்றதாக அமைதியற்றதாகத்தான் இருக்கும். சமூகத்தில் வெறுப்புணர்வும், விஷம் தோய்ந்த கருத்துக்களும் மக்களைத் துண்டாடும் கொடிய சிந்தனைகளும் பரப்பப்படும்போது அது நேரடியாக பொருளா தாரத்தைச் சிதைக்கும். இந்தியாவில் அதுதான் நடந்துகொண்டிருக்கிறது.

பண மதிப்பிழப்பு நடவடிக்கை, வல்லுநர்களின் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் புறக்கணித்துவிட்டு அவசரம் அவசரமாக சரியான உட்கட்டமைப்பு இல்லாமல் திணிக்கப்பட்ட ஜிஎஸ்டி வரிவிதிப்பு, பொதுமக்களின் கைகளிலிருந்த பணத்தை வலுக்கட்டாயமாக வங்கியில் போட வைத்து அவர்களுடைய பணப்புழக்கத்தை தடுத்துவிட்டது, கண்மூடித்தனமான வருமானவரித் துறையின் ஆணைகள், முட்டாள்தனமான பொருளாதாரக் கொள்கைகள் போன்றவற்றால் நாட்டின் மொத்த உற்பத்தி குறைந்து அதன் காரணமாக இந்தியப் பொருளாதாரம் மிகப்பெரும் சரிவைச் சந்தித்துள்ளது.

இந்திய அரசு இந்த நிதியாண்டில் திரட்ட வேண்டிய தொகை ரூ.5 லட்சம் கோடி. இதில் ரிசர்வ் வங்கியிலிருந்து பெற்றது ரூ.1,76,000/- கோடி. மீதமுள்ள தொகைக்கு இந்தியன் ஏர்லைன்ஸ், பாரத் பெட்ரோலியம், பிஎஸ்என்எல், எஸ்ஐஜஎல் போன்ற நிறவனங்களை விற்க முடிவெடுத்திருக்கிறது. மேலும் மூன்று பொதுத்துறை வங்கிகள், எல்ஐசி, சேலம் ஸ்டீல் பிளாண்ட், நெய்வேலி நிலக்கரி சுரங்கம் போன்றவற்றை விற்பதற்கு எண்ணிக்கொண்டிருக் கிறது. இவைபோக ரயில்வே துறை, மெட்ரோ ரயில் நிறுவனங்கள், சென்னை ஹார்பர், விமான நிலையங்கள் போன்றவற்றை குத்தகைக்குவிட பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றை தனியார்வசம் விட்டுவிட ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பதாகவும் பேச்சுக்கள் அடிபடுகின்றன. இப்படி எல்லாவற்றை

யும் தனியாருக்கும், குத்தகைக்கும், விற்பனைக்கும் விட்டால் அரசாங்கம் என்ற ஒன்று எதற்கு என்று கேள்வி எழுகிறது.

இந்திய அரசமைப்பின் தேசிய மாதிரி கணக் கெடுப்பின்படி இந்தியாவின் உண்மையான பிரச்னை வேலையின்மை என்பது கண்டறியப்பட்டுள்ளது. மகாத்மாகாந்தி தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டத்தில் 18 வயது முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் பங்கேற்பது அதிகரித்து வருவது இந்த பிரச்னையின் தீவிரத்தை சுட்டிக்காட்டுவதாக உள்ளது. இன்னொரு ஆய்வு கூறுகிறது இந்தியாவில் ஒவ்வொரு இரண்டாவது குழந்தைக்கும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளது என்றும், மூன்று லட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் தற்கொலை செய்து கொண் டுள்ள தகவலும் நம்மை அதிர்ச்சியுற வைக்கிறது. சுகாதார வசதியின்மை, சிறந்த கல்வியின்மை போன்றவற்றால் ஏழை எளிய மக்களின் வாழ்வில் உயர்வைக் காணமுடியவில்லை. சாமானிய மக்களிடம் பணப்புழக்கம் அருகிவிட்ட நிலையில் இந்தப் பணமெல்லாம் போனது எங்கே என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுவது நியாயம்தானே. 135 கோடி மக்கள் தொகை உள்ள இந்தியாவில் சரிபாதி மக்களின் செல்வத்தை விட அதிகமாக 7 இந்தியர்கள் வைத்திருக்கும் செல்வத்தின் கூட்டுதொகை உள்ளது என்ற தகவல் கூட அதற்கு பதிலாக இருக்கலாம். இவைபற்றி யெல்லாம் கண்டுகொள்ளாமல் பாஜக அரசாங்கம் வேறு வேலைகளில் பிஸியாக இருக்கிறது. சுய தம்பட்டம் அடிப்பதிலும், சுயவிளம்பரம் செய்து கொள்ளும் விழாக்களை நடத்துவதிலும், கொலை வெறியுடன் கூடிய மதவெறி-இனவெறி உணர்ச்சி களைத் தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலும் அது தீவிரமாக உள்ளது.

2016 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் ஆசிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி குறித்த தரவுகளை ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Develoment Bank) வெளியிட்டுள்ளது. இதன்படி 2016-18 காலகட்டத்தில் வங்கதேச நாட்டின் ஜிடிபி தொடர்ந்து 7.1 சதவீதத்திலிருந்து 7.9 சதவீதமாக பொருளாதார வளர்ச்சி அதிகாரித்துள்ளது. 2019ஆம் ஆண்டிலும் வளர்ச்சிக்கான அறிகுறியையே வங்கதேசப் பொருளாதாரம் பெற்றுள்ளது. ஆனால் இக்காலத்தில் தெற்காசியாவில் பெரிய நாடான இந்தியாவில் ஜிடிபி தொடர்ந்து கீழ்நோக்கி சென்றுள்ளது.2016-18 காலகட்டத்தில் இந்தியாவின் ஜிடிபி 7.2 சதவிகிதம் என்பதிலிருந்து 6.5 சதவிகிதமாக கடும்சரிவைச் சந்தித்துள்ளது. 2019-20 நிதியாண்டிலும் இந்தியா வின் ஜிடிபியில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பில்லை என்பதையே இந்திய பொருளாதார வளர்ச்சி குறித்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தொழில்துறை உற்பத்தி வளர்ச்சியானது (Index of Industrial Production – IIP) எப்போதும் இல்லா வகையில் 2019 ஆகஸ்டில் மைனஸ் 1.1 சதவிகிதம் என்று கடும் அடி வாங்கியுள்ளது. தொழிற்சாலை உற்பத்தி குறித்து மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை (Ministry of Statistics and Programme implementation - MOSPI) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தொழிற்சாலை உற்பத்தி கடந்த 2018 ஆகஸ்ட் மாதத்தில் 4.8 சதவிகிதம் என்ற வளர்ச்சி நிலையைக் கொண் டிருந்தது. கடந்த 2019 ஜுலையிலும் கூட 4.3 சதவிகிதமாக இருந்து. ஆனால் தற்போது 2019 ஆகஸ்டில் மைனஸ் 1.1. சதவிகிதம் என்ற மோசமான நிலைக்கு போயிருக்கிறது. நாட்டின் 23 முக்கிய தொழில்துறை குழுமங்களில் 15 குழுமங்களின் தொழிற்சாலை உற்பத்தி மைனஸ் நிலைக்கு இறங்கியுள்ளது. தொழில்துறை உற்பத்தி அல்லது தொழிற்சாலை உற்பத்தி என்பது நாட்டின் வணிக நிலப்பரப்பில் பொருளாதார நடவடிக்கைகளை அளவிடுவதற்கான மிக நெருக்கமான குறியீடாகும். இப்படி எல்லா திசைகளிலும் பொருளாதாரம் மிகப்பெரிய பள்ளத்தில் உருண்டுகொண்டிருக்கும் நிலையில் அந்த ஆபத்தைக் குறித்து பொருளியல் வல்லுநர்களும் ஏனையோரும் ஆலோசனை கூறினால் அவர்களை பாஜகவினர் மிரட்டுகின்றனர். பொருளாதார மந்தநிலை என்று எதுவும் இல்லை. எனவே அதைப்பற்றி அதிகமாக பேசத் தேவை யில்லை என்று தடைபோடுகிறார் ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத்.

முதலில் 'அச்சே தின்' என்றார்கள் இப்போது 'போயே போச்' என்கிறார்கள். உண்மைதான் நல்ல காலம் வருகிறது என்றவர்கள் மக்களின் வாழ்வையும், வாழ்வாதாரங்களையும் சிதைத்து அழித்தபின் இப்போது அதைப்பற்றி பேசக்கூடாது என்று தடை போடுவது எந்தவகையிலும் நியாயமான தல்ல. துயரின் மடியில் சிக்கியிருக்கும் மக்கள் நாட்டை தவறான பாதையில் கொண்டு செல்லும் அரசாங்கத் திற்கு எதிராக குரல் எழுப்புவதை எவராலும் தடுத்து விட முடியாது. இந்திய வங்கிகளில் கடன்வாங்கி கைவிரித்து ஓட்டம் பிடித்த பெரும் கார்ப்பரேட் முதலாளிகள் தர வேண்டிய ரூ.3.5 லட்சம் கோடி கடன்களை தாராளமாக தள்ளுபடி செய்துவிட்ட பாஜக ஆட்சியாளர்கள் ஏழைகளின் வயிற்றில் அடித் திருக்கிறார்கள். தாக்குண்டு நிற்கும் இந்திய தேசத் தின் ஏழை எளிய சாமானிய மக்கள் திருப்பி அடிக்க தயாராக இருக்கிறார்கள். அந்த அடி மரணஅடியாக இருக்கும் என்பதை ஆட்சியாளர்கள் உணர்வார்கள். ❑

## கூட்டுறவு சிக்கன கடன் சங்கத்தின் ஆண்டு பேரவைக் கூட்டம்

ஓ.என்.10 நாகப்பட்டினம் அரசாங்கப் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத்தின் ஆண்டுப் பேரவைக் கூட்டம் சங்க



அலுவலகத்தில் தலைவர் ஏ.ட்டீ.அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. இயக்குநர் ப.அந்துவன் சேரல் வரவேற்றார். இயக்குனர்கள் சி.காந்தி, சி.கலியபெருமாள், எஸ்.மாலா, வை.நாகராஜ், சு.சிவகுமார், ப்பி.வைரவமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் எஸ்.விஜயலெட்சுமி மற்றும் தலைவர் ஏ.ட்டீ.அன்பழகன் அறிக்கைகளை சமர்ப்பித்தனர்.

சங்கத்தின் சார்பில் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்திற்கு வழங்கப்பட வேண்டிய கூட்டுறவு வளர்ச்சி நிதி ரூ.51,589/= மற்றும் கூட்டுறவு கல்வி நிதி ரூ.34,392/= மொத்தம் ரூ. 85,981/-க்கான காசோலையை மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்திற்கு தலைவர் ஏ.ட்டீ.அன்பழகன், சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் தங்க.கதிரவன் அவர்களிடம் வழங்கினார்.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தலைவர் ஆர்.முத்துகிருஷ்ணன் மற்றும் நாகப்பட்டினம் தொழிற்சங்கத் கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சங்கத்தின் துணைத் தலைவர் மா.ராணி நன்றி கூறினார். ❑

## பயிற்சி முகாம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கிருஷ்ணகிரி மாவட்ட மையம் சார்பில் சங்க பயிற்சி முகாம் மற்றும் 6ஆம் மாவட்ட மாநாட்டு வரவேற்பு குழு நிறைவு விழா 19.10.2019 அன்று காலை அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் பி.சந்திரன் தலைமை தாங்கினார், மாவட்ட செயலாளர் ஆர்.நடராஜன் அனைவரையும் வரவேற்றார். வட்ட, மாவட்ட மாநாடுகளில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிர்வாகிகளுக்கு சங்க பயிற்சி அளிக்கும் விதமாக அரசு ஊழியர் சங்க மேனாள் மாநில துணைத் தலைவர் கே.அகோரம், "சங்கத்தில் பணியாற்றும் சாத்திரம் கற்போம்" என்ற தலைப்பில் வகுப்பெடுத்தார்.



2019 செப்டம்பர் 06, 07 தேதிகளில் 6ஆம் மாவட்ட மாநாடு சிறப்பாக நடைபெற பணியாற்றிய வரவேற்பு குழு தோழர்கள் மாவட்ட மையத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். நிகழ்ச்சியில் 16 பெண் ஊழியர்கள் உட்பட 64 பேர் கலந்து கொண்டனர். மாவட்ட பொருளாளர் வி.தேவராஜ் நன்றி கூறினார். ❑

## வாசகர் கடிதம்

2019 அக்டோபர் அரசு ஊழியர் இதழ் படித்தேன். முன்பக்க அட்டைப்படம் நமது சங்க மாநாட்டின் எழுச்சியை பறைசாற்றியது. ஜிஜி எழுதிய ‘சிக்னலில் கிடைத்த ஞானம்’ என்ற கட்டுரை படித்தேன். மனதை நெகிழ செய்தது. மொத்தத்தில் இதழ் சிறப்பாக இருந்தது.

- **ரா.தட்சிணாமூர்த்தி**, கடலூர்

# தஞ்சை மாநாட்டுத் தீர்மானத்தின் வெற்றியை உறுதி செய்வோம்!


தங்களது துன்பங்களை வெறுமனே
சகித்துக் கொண்டு போகாமல்
அவற்றை எதிர்த்து போராட நமது
மக்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.
அவர்கள் தங்கள் உழைப்பை
நேசிக்கவும், நிமிர்ந்து நிற்கவும்,
செயலாற்றவும் கற்றுத் தர வேண்டும்.

**- மாக்சிம் கார்க்கி**

**ஆ**ம் இன்று ஒவ்வொரு உழைப்பாளியும் இதை தனது மனதில் நிறுத்திக் கொண்டு செயலாற்றிட வேண்டியுள்ளது. இன்று இந்த தேசத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? உண்மையில் ஒரு வல்லரசு தேசத்துக்குரிய எல்லா தகுதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இம்மண்ணில் அதை அடைய வேண்டுமென ஆள்வோர் ஏதேதோ பேசிக்கொண்டு இருக்கிறார்கள். உலகையே ஆள்கிற அறிவையும், திறமையையும் வைத்திருக்கிற இந்தியா, இளைஞர்கள் கூட்டம் தெருவில் அலையவிடப்படுகிறார்கள் எதிர்த்து பேச அல்ல. பேசவே கூடாத சூழலில் உணர்வுகளை முடக்கிக்கொண்டு தாங்கள் வாழ அனுமதிக்கப்படும் காலம் வரை உழைப்பாளிகள் உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும்... அதுதான் நன்னடத்தையின் அர்த்தம்... அழகு என்கிறது ஆளும் வர்க்கம். உழைப்பாளிகளும் மறுதலிக்காமல் விடுதலை உண்டு எனும் நம்பிக்கையில்... ஆனால் மரணம் ஒன்றே விடுதலை என்கிறது ஆளும் வர்க்கம். அது உண்மை எனில் அத்தகைய மரணம் இயற்கையாக நேர்வதல்ல, அது ஆள்வோர் செய்யும் படுகொலையே.

என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில் என்றான் கவிஞன். ஆம் அளப்பரிய வளமிக்க இந்த நாட்டில் வளங்களைப் பங்கு போட்டுக் கொள்ள இங்கு பல தந்திரங்கள் கையாளப்படுகிறது. வளங்களை உருவாக்குகிற உழைப்பாளிகளுக்கு உரிய கூலியைக் கொடுக்க மறுக்கிறார்கள். பத்து ரூபாய் கொடுக்க வேண்டிய வேலைக்கு ஐந்து ரூபாய் கூலியின் ஆள் அமர்த்தும் அக்கிரமத்தை மத்திய, மாநில அரசே செய்கிறது. தொகுப்பூதியம், மதிப்பூதியம், அவுட்சோர்சிங், ஒப்பந்த நியமனம், சிறப்பு காலமுறை ஊதியம் என ஏதேதோ பெயர்களை சொல்லி உழைப்பாளி மக்களின் ரத்தத்தை அட்டை உறிஞ்சுவது போல் உழைப்பை சுரண்டுகிறது. ஆளும் வர்க்கம். சிலந்தியின் வலைப்பின்னலை போல் சிக்கிய ஈக்களாய் துடிக்கிறது உழைப்பாளி வர்க்கம்.

தேசம் விடுதலை பெற்று 73 ஆண்டுகள் ஆனபின்னும் கூட விடுதலை பெற்று இந்திய அரசு தான் உருவாக்கிய குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948ஐ தானே மீறுகிறது. இங்கு சம வேலைக்கு சம ஊதியம் என்ற சட்டப்பிரிவு அடக்கம் செய்யப்படுகிறது. இது ஏதோ சட்டமீறல் மட்டுமல்ல... இது ஒரு வன்முறை. ஆயுதம் கொண்டு



*தாக்குவது மட்டும் வன்முறையல்ல. இங்கு கண்ணுக்குத் தெரியாமல் கொஞ்சம் கொஞ்சமாய் நம்மைச் சீரழிக்கிற வன்முறைகள்தான் ஏராளமாய் நிரம்பிக் கிடக்கிறது. அரசியல் சட்டப்படி அரசு செய்ய வேண்டிய கடமைகளைக்கூட சாதனைகளாக பறைசாற்றிக் கொண்டிருக்கிற ஆட்சியாளர்களே இன்று சட்டத்தை மீறிய முதல் குற்றவாளிகளாக அம்பலப்பட்டு நிற்கிறார்கள்.*

*13வது மாநில மாநாட்டில் இரண்டு அறைகூவல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முதல்கட்ட இயக்கம் 11.10.2019 மாநிலம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் செய்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பெருந்திரள் முறையீடு செய்தது. இவ்வியக்கம் மாநிலம் முழுவதும் மிகவும் எழுச்சிகரமாக நடைபெற்றது. இந்த ஆட்சியாளர்களின் அதிகார வர்க்கத்தின் போக்கினால் ஜனநாயக முறைப்படி காந்திய வழியில் நமது வாழ்வாதார கோரிக்கைக்காக போராடிய நமது சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியன் பணி ஓய்வு பெறுகின்ற நாளில் (31.5.2019) தற்காலிக பணிநீக்க உத்தரவு, இந்த சர்க்கார் மாநிலத் தலைவரை தற்காலிக பணிநீக்கம் செய்தால் ஒட்டுமொத்த சங்கங்கள் தமிழ்நாட்டில் முடங்கிப் போய்விடும் என்று ஆட்சியாளர்கள் நினைத்தார்கள். இல்லை இல்லை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எத்தகைய தாக்குதலை தொடுத்தாலும் களத்தில் நின்று ஊழியர்கள் நலனுக்காக போராடுவோம். அதேபோல் கரூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் ஊழியர் விரோத நடவடிக்கையினால், முன்னாள் மாநில துணைத் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியன், கோவை மாவட்டத் தலைவர்கள் உள்ளிட்ட நான்கு பேர் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் மற்றும் திருவாரூர் முன்னாள் மாவட்டத் தலைவர் மாறுதல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள், மருத்துவத் துறை நிர்வாக ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் ஆகியோர்களை பழி வாங்கும் நோக்கத்தோடு, காழ்ப்புணர்ச்சியுடன் இந்த சர்க்கார் நயவஞ்சக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இதை உடன் ரத்து செய்திட வேண்டுமென வலியுறுத்தி மாநிலம் முழுவதும் மிக எழுச்சியோடு, உணர்வுபூர்வமாக சக்திமிக்க இயக்கமாக ஆர்ப்பாட்டமும், பெருந்திரள் முறையீடு நடைபெற்றுள்ளது. இதன்மூலம் அரசுக்கு தெரிவிப்பது என்னவென்றால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் நம்மை அழைத்து பேசி தீர்வு காண வேண்டும் என தமிழக அரசுக்கு இந்த ஆர்ப்பாட்டம் மூலம் வலியுறுத்தி கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

*இரண்டாவது அறைகூவல் தீர்மானம் நவம்பர் 11 முதல் 15 வரை 5 முனைகளிலிருந்து அரசு ஊழியர் மற்றும் பொதுமக்கள் சந்திக்கும் பிரச்சாரம் இயக்கம்*

*களியக்காவிளை, இராமேஸ்வரம், வேதாரண்யம், ஒசூர் மற்றும் கூடலூர் (நீலகிரி)*

*(16.11.2019 மற்றும் 17.11.2019 சென்னை நகரம் முழுவதும் பிரச்சாரம்)*

*ஐந்து முனைகளிலிருந்து ஊழியர் மற்றும் பொதுமக்களை சந்திக்கும் இயக்கத்தை மிக சக்திமிக்க இயக்கமாக திட்டமிட்டு நடத்திடுமாறு மாவட்ட மையங்களை மாநில மையம் கேட்டுக் கொள்கிறது.*

*ஏற்கனவே சென்ற மாத அரசு ஊழியர் இதழில் இவ்வியக்கத்தின் கோரிக்கை குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இருப்பினும் இன்றைய சூழலில் உலகில் அதிக இளைஞர்கள் உள்ள நாடு இந்தியா தற்போது 45 ஆண்டுகள் இல்லாத வேலைவாய்ப்பின்மை உருவாகி இருக்கிறது. (7.2% உயர்ந்துள்ளது) மத்திய அரசு பிரதமர் நரேந்திர மோடி, நான் ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவேன் என்றும், மாநில அரசு ஆண்டுக்கு 1 லட்சம் பேருக்கு வேலை தருவோம் என்று தங்களது தேர்தல் வாக்குறுதியில் சொன்னார்கள். ஆனால் இன்றைய இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் தலா 1 கோடியே 30 லட்சம் பேர் படித்து முடித்து வேலை வாய்ப்புக்கு வருகின்றனர். இதற்கேற்ற வகையில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க மத்திய,*

மாநில அரசுகள் முயற்சிக்கவில்லை. மேக் இன் இந்தியா, ஸ்டார்ட் ஆப் இந்தியா, ஸ்கில் இந்தியா, முத்ரா வங்கி திட்டம் என கவர்ச்சிகரமான பல திட்டங்களை அறிவித்தாலும் உண்மையில் அவை பெரிய அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கவில்லை. மறுபக்கம் ஓராண்டுக்கும் மேலாக காலியாக உள்ள அரசு மற்றும் அரசுத் துறை பணியிடங்களை மூடச் சொல்லி மாநிலங்களுக்கு சுற்றறிக்கை அனுப்புகிறது மத்திய அரசு. அதேநேரம் ஓய்வு பெற்றவர்களை மீண்டும் பணியமர்த்த உ.த.கிராம நிர்வாக அலுவலர் 1500 பேர் ஓய்வு பெற்றவர்கள் ஒப்பந்த முறையில் நியமனம், ரயில்வேயில் ஓய்வு பெற்றவர்கள் நியமனம் நடவடிக்கை மூலம் இளைஞர்களை வஞ்சித்து வருகிறது மத்திய அரசு. அகில இந்திய அளவில் ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு முறை வேலை வாய்ப்பு குறித்த விவரங்களை அரசு நிறுவனங்கள் வெளியிட வேண்டும். 2016 மே மாதத்திற்கு பிறகு எந்தவொரு விவரம் வெளியிடவில்லை. வேலை வாய்ப்பு தரவில்லை என்பது மட்டும் அல்ல, அது குறித்து உண்மை விவரங்களை வெளியிட மத்திய அரசு தயாராக இல்லை.

தமிழகத்தில் மே 2016 முதல் 2018 மே வரை இரண்டு ஆண்டு காலத்தில் அரசு அளித்த வேலை வாய்ப்பு எண்ணிக்கை 5802 பேர் மட்டுமே. ஆனால் தமிழகத்தில் வேலை வாய்ப்பு அலுவலகத்தால் பதிவு செய்தோர் எண்ணிக்கை 79,44,097 பேர். தமிழகத்தில் அரசுத் துறையில் நாலரை லட்சம் காலிப் பணியிடம் உள்ளது. ஓய்வு பெறக்கூடியவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

**வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தோர் வகுப்பு வாரியான விவரம்:**

| | |
|---|---|
| பதிவு செய்தோர் எண்ணிக்கை | 79,44,097 |
| ஆசிரியர்கள் | 8,18,900 |
| இடைநிலை ஆசிரியர் | 1,90,018 |
| பட்டப்படிப்பு முடித்தவர்கள் | 3,61,448 |
| முதுகலை பட்டம் | 2,67,524 |
| பட்டப்படிப்பு | 4,31,561 |
| அறிவியல் பட்டப்படிப்பு | 5,82,699 |
| வணிகவியல் | 2,98,909 |
| பொறியியல் | 2,28,950 |
| மருத்துவப் படிப்பு | 2,302 |
| வேளாண்மை பட்டப்படிப்பு | 6,815 |
| கால்நடை மருத்துவர் | 1,540 |
| சட்டப்படிப்பு | 2,117 |
| ஒட்டுமொத்தத்தில் 24 - 35 வயதுடையவர்கள் | 27,30,524 |
| 36 முதல் 57 வயதுடையவர்கள் | 11,84,921 |

| | |
|---|---|
| எல்லாவற்றுக்கும் மேலாக 58 வயதை கடந்தவர்கள் | 7,761 |
| இந்தியாவில் ஓராண்டில் பொறியியல் படித்து வெளியேறுபவர்கள் | 15 லட்சம் |
| 15 லட்சம் பேரில் வேலை கிடைப்பது | 7% |
| மத்திய அரசு காலியிடம் | 7.5 லட்சம் |
| பொதுத்துறை நிறுவனங்களில் | 2.2 லட்சம் |
| இந்தியா முழுவதும் மாநிலங்களில் காலியிடம் | 38.8 லட்சம் |
| உலகில் உள்ள நாடுகளில் 1000 மக்கள் தொகைக்கு அரசு ஊழியர்கள் | |
| பிரேசில் நாட்டில் | 111 பேர் |
| சீனாவில் | 57 பேர் |
| இந்தியாவில் | 16 பேர் |

இந்நிலையில் காலிப் பணியிடங்கள் நிரப்புவதற்கான உரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளவில்லை. தற்சமயம் இருக்கிற நிரந்தர பணியிடங்களையும் அழிப்பதற்கான அரசு ஆணை 56ஐ பிறப்பித்துள்ளது. அரசு பணியை தனியார்மயமாக்குவது, கருவூலத்துறையை

கணினிமயம் என்ற பெயரில் (IFHRMS) என்ற திட்டத்தில் விப்ரோ கம்பெனிக்கு ஒப்பந்தம் விடப்பட்டுள்ளது. அதேபோல் வணிகவரித்துறை, மருத்துவத் துறை தற்போது சர்வே துறையில் உள்ள 1500க்கும் மேற்பட்ட சர்வேயர்கள் பதவி பறிக்கப்பட்டு, ஒப்பந்த முறையில் பணியில் அமர்த்தி அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு துறைகளை மறுசீரமைப்பு என்ற பெயரில் அரசு பணிகளை தனியார்மயமாக்கும் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கும் இந்த அரசாணை வழிவகை செய்கிறது. தற்சமயம் இ-சேவை மையம் என்ற பெயரில் பல்வேறு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மையத்தில் பணியாற்றக்கூடியவர்களுக்கு வேலை பாதுகாப்பு, உரிய ஊதியம், வேலை நேரம் எதுவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது.

அரசு பணிகளை மேற்கொள்ளும்போது பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. தமிழக அரசாங்கம் பல்வேறு கொள்கை அறிக்கைகள் சமீபத்தில் வெளியிட்டுள்ளது. ஆனால் இளைஞர்களின் வேலை வாய்ப்பு குறித்து எந்த திட்டங்களும் அரசின் சிந்தனையில் இல்லை என்பது வேதனை அளிக்கக்கூடியதாக உள்ளது. அரசாங்கப் பணி என்பது எட்டாக்கனியாகவும், கனவாகவும் இருக்கிற நிலையில் தமிழக மக்கள் தொகையில் ஏராளமான ஆற்றலோடும், திறன்களோடும் இருக்கக்கூடிய பெரும்பகுதி இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு அரசின் திட்டம் என்ன? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இதோடு மட்டுமல்ல, நமது சமூக பாதுகாப்பாக இருக்கக்கூடிய புதிய பென்சன் திட்டம் ரத்து, ஊதியக்குழு அறிக்கை உடன் வெளியிடுவது, 21 மாத ஊதிய மாற்று நிலுவைத் தொகை வழங்க வேண்டும், அனைத்து பழி வாங்கும் நடவடிக்கை ரத்து செய்வது, அனைத்துத் துறைகளையும் தனியார்மயப்படுத்தக்கூடிய நடவடிக்கையை கைவிடுவது போன்ற கோரிக்கைகளை வைத்து களம் காண வேண்டிய ஆகப்பெரிய கடமை நம்முன் இருக்கிறது.

இத்தகைய சூழலில்தான் தஞ்சாவூரில் நடைபெற்ற 13வது மாநில மாநாட்டில், தமிழகத்தில் பல்வேறு அரசுத் துறையில் மூன்றரை லட்சம் பேர் சிறப்பு கால முறை மற்றும் தொகுப்பூதியம், மதிப்பூதியம், வரையறுக்கப்படாத ஊதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர், ஊர்ப்புற நூலகர், எம்ஆர்பி செவிலியர்களுக்கு முழு நேர சுகாதார திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், கணினி இயக்குநர்கள், தோட்ட கலைத்துறை ஊழியர்கள் தொகுப்பூதியத்தை ஒழித்து காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், காலி பணியிடம் நிரப்ப வேண்டும், இளைஞர்களின் வேலை வாய்ப்பை பறிக்கும் அரசாணை எண் 56ஐ ரத்து செய்ய வேண்டும், ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை திட்டத்தை கைவிடக் கோரியும் நடைபெறும் ஊழியர் மக்கள் சந்திப்பு இயக்கமான ஐந்து முனைகளிலிருந்து ஜீப் ஜாதா இயக்கத்தில் இன்னும் சகல பகுதி கொத்தடிமைக் கூலிகளையும் மீட்டெடுத்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதே இப்போர்ப் பிரகடனம்.

தோழர்களே

**பூமியைப் புரட்டும் புழுதியின் கீதங்கள்**
**புறப்பட்டு வருகிறபோது**
**புல்லின் நுனியிலும் புதுமை சிலிர்க்கும்**
**புல்லாங்குழலிலும் புரட்சி வெடிக்கும்... ஆம்**
**நமது போர்ப் பிரகடனம் வென்றே தீரும்.**

❑

☞ கைவிடப்படும் மக்கள் நலன்,

☞ சூறையாடப்படும் இளைஞர்களின் எதிர்காலம்,

☞ மறுக்கப்படும் அரசு ஊழியர்களுக்கான உரிமை,

☞ தடுக்கப்படும் தரமான மாணவர் கல்வி -

இவற்றை மீட்டெடுக்கும்

# ஊழியர் – மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கம்!

**ஐந்து முனைகளிலிருந்து 11.11.2019 முதல் 15.11.2019 வரை**
**தமிழகம் தழுவிய பிரச்சாரம்**
**16.11.2019 மற்றும் 17.11.2019 சென்னையில் பிரச்சாரம்**

# நிறைவு நாளான 18.11.2019
# கோட்டை நோக்கி பேரணி

இந்தியாவில் தமிழகம் எல்லா விஷயங்களிலும் முன்னோடி மாநிலமாக இருந்து வந்திருக்கிறது. சமூகநீதி, சமத்துவம், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், பெண்களுக்கான உரிமை போன்ற பல தளங்களில் முன்னோடியாக இருந்த மாநிலம் தற்போது எல்லாவற்றிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டு வருகிறது. இதற்கு காரணம் தமிழகத்தில் கல்வி வேலைவாய்ப்புகளில் இம்மாநில இளைஞர்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுவதும் அரசுப்பள்ளிகள் மற்றும் அரசுத்துறைகளை தனியார்மயமாக்கும் முயற்சிகள் நடைபெறுவதும் ஆகும். அரசு அலுவலகங்களில் அரசு ஊழியர்களும், அரசுப்பள்ளிகளில் ஆசிரியர்களும் முழுமையான அளவில் நியமிக்கப்பட்டு பணி செய்யும் வாய்ப்புகள் வழங்கப்பட்டு மத்திய அரசுக்கு இணையான உரிமைகளும் ஊதியமும் வழங்கப்பட்டால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுவதுடன் இம்மாநிலம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற உழைப்பதுடன் சமுதாய மேம்பாட்டையும் பேணிக்காப்பதில் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தீவிர கவனம் செலுத்துவார்கள்.அதன் பின்புலத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மக்களை நோக்கிய பயணத்தை தொடர்ந்து வருகிறது.

ஆனால் இன்று நடப்பவை என்ன? சமூக நீதியைக் காக்க கொண்டு வரப்பட்ட திட்டங்கள் இன்று காணாமல் போகின்ற நிலையில் இருக்கின்றன. நீட் தேர்விலிருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்கு என்பது கையிலிருந்து நழுவிய கண்ணாடிக் குவளையாகிப் போனது. மருத்துவ மேற்படிப்பு மாணவர்கள் கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு பணி செய்தால் அவர்களுக்கு மேற்படிப்பில் கொடுக்கப்பட்டு வந்த 50 சதவீத இட ஒதுக்கீட்டிற்கான கதவுகளும் இழுத்து மூடப்பட்டுள்ளன. தமிழக அரசு அலுவலகங்களில், பாலிடெக்னிக் கல்லூரிகளில் தமிழக மாணவர்களுக்கென இருந்த இடஒதுக்கீடு இப்போது எல்லோருக்குமானதாக மாற்றப்பட்டிருக்கிறது. அரசுத்துறைகளில் காலியாக விடப்பட்ட பணியிடங்கள் பல வருடங்களாகியும்

நிரப்பப்படவில்லை. அரசு வேலைகளில் தமிழக இளைஞர்களுக்கு முன்னுரிமை தரப்படுவது மறுக்கப்பட்டு பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் வேலையில் சேர வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் தமிழகத்தில் தழைத்தோங்கிய சமூகநீதி புதைக்கப்படக்கூடிய வேலைகள் தொடங்கப்பட்டுள்ளது தெளிவாகிறது.

புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் திட்டம் ஒன்றை உருவாக்கி அரசுப்பள்ளிகளை மூடக்கூடிய முயற்சிகளை மத்திய மாநில அரசுகள் மேற்கொண்டு வருகின்றன. வரைவு கல்விக்கொள்கை அறிக்கை வெளியிட்டு அது இறுதிப்படுத்தப்படாத நிலையிலேயே தமிழக கல்வி அமைச்சர் 3,5,8ஆம் வகுப்புகளுக்கும் பொதுத்தேர்வு என்று அறிவிக்கிறார். அதற்கு எதிர்ப்புகள் கிளம்பியதும் அதை மூடி மழுப்புகிறார். கல்லூரிகளை முடித்து வெளியே வரும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் எட்டாக்கனியாகி வருகின்றன. அவர்கள் தலைமைச்செயலகம், உயர்நீதிமன்றம் போன்ற இடங்களில் துப்புறவுப் பணியாளர்கள் பணியாவது கிடைக்காதா என்று வேலைக்காக அலைபாய்கிறார்கள். இன்னும் கொடுமையான விஷயம் மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டத்தில் (100 நாள் வேலை) 18 வயது முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் பங்கேற்பது அதிகரித்து வருகிறது என்றும் இவர்களில் பெரும்பான்மையோர் பட்டதாரிகள் என்ற அதிர்ச்சிகரமான விபரங்கள் வெளிவந்துள்ளன.

அரசு அலுவலகங்களில் ஏற்கெனவே இருக்கும் பணியிடங்கள் காலியாக விடப்பட்டு அவை நிரப்பப்படாமலேயே விடப்பட்டுள்ளன. இதுபோதாதென்று தேவையற்ற பணியிடங்களை கண்டறிந்து அந்தப் பணியிடங்களை குறைக்க அரசாணை வெளியிடப்பட்டு அது செயல்முறைக்கு வர ஆரம்பித்து விட்டது. படிப்படியாக அரசுத்துறைகளை இழுத்து மூடிவிட்டு அவற்றை தனியார்வசம் ஒப்படைக்கும் போக்கும் தொடங்கிவிட்டது. அதன் முன்னுதாரணமாக கருவூல கணக்குத் துறை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு அதில் பணிபுரிந்து வரும் ஊழியர்கள் சொல்லொணா துயரத்திற்கும், மனஉளைச்சலுக்கும் ஆட்படுத்தப்பட்டுள்ளனர். ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டமென்று இதற்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் பணி ஓய்வு, பணிக்காலத்தில் இறப்பு போன்ற காரணங்களால் ஏற்பட்டுள்ள சுமார் நான்கரை லட்சம் பணியிடங்களில் ஊழியர்கள் நிரப்பப்படாமலேயே அவர்கள் வேலைகளை இருக்கின்ற ஊழியர்கள் பார்த்து வருகிறார்கள். இதனால் பொதுமக்களுக்கு அரசு ஊழியர்கள் செய்துதர வேண்டிய பணிகளில் காலதாமதம் ஏற்படுவது ஒரு பக்கமும் காலதாமதம் காரணமாக மக்கள் மத்தியில் அரசு ஊழியர்கள் மீது அதிருப்தி மறுபக்கமும் எழுந்துள்ளன.

மிக முக்கியமான சில துறைகளைத் தவிர்த்து இனிமேல் அரசுப்பணிகளுக்கு நிரந்தர ஊழியர்களை பணியமர்த்துவதில்லை என்ற முடிவுக்கு அரசு வந்துள்ளது. இதனால் ஒப்பந்தம் மற்றும் அவுட்சோர்சிங் முறையில் ஆட்களை நியமித்து 'அமர்த்து - வேலை முடிந்ததும் துரத்து' என்கிற கொள்கையை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது அரசாங்கம். இதன்மூலம் வேலைகள் ஒப்பந்தக்காரர்களிடம் கொடுக்கப்படும் நிலைமை தோன்றியுள்ளது. இதன்காரணமாக இனிமேல் பட்டதாரிகளும் இளைஞர்களும் ஒப்பந்த கூலி வேலைக்குத்தான் போயாக வேண்டும் என்ற கட்டாயத்தை அரசு திணிக்கும் முயற்சியை மேற்கொண்டு வருகிறது.

ஏற்கெனவே குறிப்பிட்ட ஊதிய முறையில் (consolidate pay) அரசு மருத்துவமனைகளில் செவிலியர்களை நியமிக்கும் போக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 30 ஆண்டுகளாக அரசுப்பள்ளிகளில் மாணவ மாணவியருக்கு மதிய உணவு அளித்து வரும் சத்துணவு ஊழியர்களும், அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளை பராமரித்து வரும் அங்கன்வாடி ஊழியர்களும், மற்றும் கிராமங்களின் முதுகெலும்பாக உள்ள வருவாய் கிராம உதவியாளர்களும், கற்றல் திறன் மேம்பாட்டுக்காக கிராமந்தோறும் அமைக்கப்பட்டுள்ள நூலகங்களில் பணிபுரியும் ஊர்ப்புற நூலகர்களும் சிறப்பு ஊதியம் என்ற பெயரில் குறைவான ஊதியம் பெற்று வருகிறார்கள். இவர்களை அரசு ஊழியர்களாக அங்கீகரித்து வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அரசால் ஏற்கப்பட்டும் அது இன்னும் செயல்முறைக்கு வராமல் உள்ளது. இவற்றை தமிழக மக்களும் அரசு ஊழியர்களும் ஒன்றுசேர்ந்து எதிர்ப்பதன் மூலம் மட்டுமே நாட்டு மக்களுக்கான நியாயங்கள் காக்கப்படும். தமிழகத்தின் இளைஞர்களின் வேலை வாய்ப்பு, மக்கள் நலம், அரசுத்துறையில் பணிபுரியும் ஊழியர்கள் நலன் இவற்றின் பேரில் அரசாங்கத்தின் கவனத்தை உடனடியாக ஈர்ப்பதற்காக

பிரதானமான ஐந்து கோரிக்கைகளின் பேரில் இப்பிரச்சார இயக்கம் நடைபெறுகிறது. அவற்றின் முக்கிய அம்சங்கள்:

- **இளைஞர்களின் வேலை வாய்ப்பைப் பறிக்கும் அரசாணை எண்.56-ஐ ரத்து செய்திட வேண்டும்**

வேலைவாய்ப்பின்மை என்பது அந்தந்த தனிப்பட்ட இளைஞனின் பிரச்னை அல்ல அது சமூகத்தின் பிரச்னை என்பதை அரசாங்கம் உடனே கவனிக்கமால் விட்டுவிட்டால் அதற்கான விலையை இந்த சமுதாயம் அடுத்த சில ஆண்டுகளில் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். வேலையின்மையும், வறுமையும் இங்கு வாழும் மக்களை சொந்தநாட்டிலேயே அகதிகளாக்கிவிடும் என்பதை ஆட்சி செய்பவர்கள் புரிந்துகொண்டதாக தெரியவில்லை. இந்த நாட்டின் படித்த இளைஞர்கள் சொந்த நாட்டிலேயே வேலைவாய்ப்புகளை பெறமுடியாமல் போவதும், இங்கு அரிதாக ஏற்படும் வேலைவாய்ப்பைக்கூட வெளி மாநிலத்திலிருந்து வரும் இளைஞனுடன் போட்டியிட்டு பெறும் சூழ்நிலையையும் அரசாணை எண்.56 ஏற்படுத்தப் போவது உறுதி. அரசாணை எண்.56ன் உண்மையாக அர்த்தம், அரசாங்கத்தை தனியார்வசம் என்ற கிழக்கிந்திய கம்பெனிகளிடம் ஒப்படைக்கும் ஏற்பாடே என்பதை மக்கள், மாணவர்கள், இளைஞர்கள் அனைவரும் உணர வேண்டும்.

இத்தகையதொரு அபாயகரமான, தமிழக மக்களின், இளைஞர்களின், அரசுத்துறைகளின், அரசுப்பள்ளிகளின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்க வெளியிடப்பட்டிருக்கும் அரசாணை எண்.56ஐ திரும்பப் பெற வேண்டும்.

- **அரசுத் துறையில் அவுட்சோர்சிங் முறை மற்றும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை கைவிட வேண்டும்**

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் இன்றைய அரசாங்கங்கள் தாங்கள் மக்களுக்கு செய்ய வேண்டிய சேவைகளை தனியார்வசத்திடம் ஒப்படைப்பதன் மூலம் தங்களுக்கான கடமைகளிலிருந்தும் ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களை தாயுள்ளத்தோடு தாங்கிப் பிடிக்கும் தர்மத்திலிருந்தும் விலகிக் கொள்ள நினைக்கின்றன. அரசாங்கம் என்ற சேவைமையம் தனியார்மயம் என்ற லாபமயத்திடம் அடகுவைக்கப்படும் போக்கைத்தான் இது காட்டுகிறது. அரசாங்க வேலைக்கு ஆள் எடுப்பதில் அறிவிக்கப்படாத தடை, ஓய்வு பெறுதல் மற்றும் பணிக்காலத்திலேயே இறந்துவிடுதல் போன்ற காரணங்களினால் ஏற்படும் காலியிடங்களை நிரப்பாமல் விட்டுவிடுதல், புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாதது. தேவைப்படும் இடங்களில் தற்காலிகப் பணியாளர்களை நியமித்துக் கொள்ளுதல், வேலை முடிந்ததும் அவர்களை விரட்டிவிடுதல், ஒப்பந்த முறையில் பணியாளர்களை அமர்த்துதல், அவுட்சோர்சிங் முறையில் ஊழியர்களை நியமித்தல் போன்ற பலகட்ட வடிகட்டலுக்குப்பின்னர் தமிழக அரசு பெரும்பான்மையான துறைகளை தனியார்வசம் ஒப்படைக்கும் முடிவுக்கு வந்துள்ளது. இதன்விளைவுகள் நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாத சமூகப் பிரச்னைகளை ஏற்படுத்தும் என்பதைப்பற்றி ஆட்சியாளர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. அரசு நிறுவனங்களை தனியார் மயமாக்கும் போக்கின் மூலம் மக்கள் நலன் என்பது கேள்விக்குறியாகிவிடும் என்பது மட்டுமல்ல இளைஞர்களின் எதிர்காலம் நாட்டின் வருங்காலம் போன்றவைகூட தீவிரவாதம், பயங்கரவாதம், ஆயுதவாதம் போன்ற சாத்தான்கள் கையில் சிக்கிவிடும் பேரபாயத்தை ஏற்படுத்திவிடும் என்பதை உணர வேண்டும்.

- **ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தை கைவிட வேண்டும்**

இந்த 'ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்திட்ட'த்தில் கூறப்பட்டுள்ள 'மனித வள மேலாண்மைத் திட்டம்' என்பதன் பொருள் அரசுப் பணியிடங்களை காலியாக்கி முற்றாக ஒழித்துக்கட்டி அதை தனியார்வசம் ஒப்படைத்து விடுவதாகும். மக்களுக்கு நல்லது செய்வதாக கூறிக்கொண்டு பல மக்கள்நலன் சார்ந்த திட்டங்களை நிறுத்தி விடுவது என்பது மக்களுக்கு எதிராக... மாணவர்களுக்கு எதிராக... இளைஞர்களுக்கு எதிராக... அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு எதிராக... அரசாங்கத்தின் நடவடிக்கைகள் உள்ளன என்பதை தோலுரித்துக்காட்டி வருகின்றன. சிக்கன

நடவடிக்கை என்ற பெயரில் மக்கள் நலனை சூறையாடப் பார்க்கும் அதிகார வர்க்கத்தினருக்கும், அரசியல் வாதிகளுக்கும், ''மக்கள் நலன்'' என்ற வார்த்தையின் உள்ளார்ந்த அர்த்தம் புரியவில்லை என்பதைவிட புரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் நினைப்பதுதான் இதன் பொருள். இத்தகைய அரசாணைகளும் உத்தரவுகளும் ஜனநாயகம் என்ற நிரபராதியின் குரல்வளையை இறுக்கும் சர்வாதிகார கயிறுகளாகும்.

## ■ தமிழக அரசுத்துறைகளில் காலியாக உள்ள நாலரை லட்சம் பணியிடங்களை உடனே நிரப்பிட வேண்டும்

லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டு வேலைக்காக காத்துக்கிடக்கின்றனர். ஆகஸ்ட் 2019 மாத நிலவரப்படி வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து பணி வேண்டி காத்திருப்போரில் 24 வயதுக்கு மேற்பட்டோர் சுமார் 40 லட்சம் பேர் இவர்களின் எதிர்காலத்தை வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் இருளடையச் செய்து வருகிறது. இந்தியாவில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டு வேலைக்காக காத்திருப்போர் எண்ணிக்கை பதினைந்துகோடியை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்றும் கிராமப்புறங்களில் வேலை கிடைக்காத நபர்களின் எண்ணிக்கை 20 கோடி பேர்களுக்கும் மேல் என்றும் பல்வேறு நிறுவனங்களின் ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. தமிழக அரசுத்துறைகளில் சுமார் நான்கரை லட்சம் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில் வேலையற்றுக் கிடக்கும் இளைய தலைமுறையினருக்கு உடனடியாக அதை வழங்கி, வேலைவாய்ப்பின்மை நிலையை அரசு ஓரளவுக்கேனும் தீர்க்க வேண்டும்.

## ■ சத்துணவு மற்றும் அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், MRB செவிலியர்கள் உள்ளிட்ட சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம் பெறும் மூன்றரை லட்சம் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும்

தமிழக அரசுத்துறைகளில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் விடப்பட்டுள்ள நிலை ஒரு புறம். படித்துவிட்டு வேலை வழங்கப்படாமல் இருக்கும் இளைஞர்களும் பெண்களும் மறுபுறம். இவற்றுக்கிடையில் இளைஞர்களையும், பெண்களையும் மிகக்குறைந்த கூலிக்கு வேலைக்கு அமர்த்தி அவர்களின் உழைப்புச் சக்தியைச் சுரண்டும் நடவடிக்கை நடைபெற்று வருகிறது. இத்தகைய கொத்தடிமை கூலிமுறையின் கீழ் சத்துணவு மைய அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், சமூகவனப் பாதுகாவலர்கள் போன்ற பல்வேறு பணிகளை செய்யக்கூடிய ஊழியர்களின் உழைப்பு முறையான ஊதியமின்றி பல ஆண்டுகளாக சுரண்டப்பட்டு வருகிறது. இவர்களுடன் தற்போது தொகுப்பூதியத்தில் MRB செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டு இப்பிரிவினர் அனைவரும் எவ்வித பணி நன்மைகளும் இல்லாமல் உழன்று வருகின்றனர். சிறப்பு காலமுறை ஊதியம் மற்றும் தொகுப்பூதியம் பெறும் மேற்கண்ட பிரிவினர் அனைவரையும் வரையறுக்கப்பட்ட ஊதியத்தின் கீழ் கொண்டுவந்து அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் பலமுறை கேட்டும், போராடியும் அரசு மௌனமாக இருந்து வருகிறது. அரசுப்பள்ளிகளை மூடுவது, அரசுப் பணிகளை தனியாருக்கு தாரை வார்ப்பது, தமிழக இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கு உத்தரவாதமளிக்காததோடு இருக்கின்ற வேலைகளுக்கும் ஆளெடுக்காமல் அவற்றை ஒப்பந்தக்காரர்களிடமோ அல்லது அவுட்சோர்சிங் முறையிலோ செய்து கொள்வது, அரசுத்துறைகளை மூடுவது போன்ற மக்கள் விரோத திட்டங்களை செயல்படுத்தி தமிழக மக்களை மேலும் மேலும் வறிய நிலைக்கு தள்ளிவிடும் சூழ்ச்சியை இந்த அரசாங்கம் மேற்கொண்டிருப்பதை மக்களுக்கு உணர்த்திடவும் அரசின் மௌனத்தை கலைத்திடவும் அரசு ஊழியர் - மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கம் நடைபெறுகிறது.

இந்த இயக்கம் தமிழகத்தின் ஐந்து முனைகளிலிருந்து அதாவது களியக்காவிளை, இராமேஸ்வரம், வேதாரண்யம், ஓசூர் மற்றும் கூடலூர் (நீலகிரி) ஆகிய இடங்களிலிருந்து நவம்பர் 11ஆம் தேதி தொடங்கி 15.11.2019ஆம் தேதி சென்னை அடைகிறது. ஐந்து முனைகளிலிருந்தும்

ஆயிரக்கணக்கான ஊழியர்கள் பங்குபெறும் இந்த ஊழியர்-மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கத்தினர் சென்னையில் ஒன்றுகூடி ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்கும் பேரணியாக 18.11.2019ம் தேதி கோட்டைநோக்கி அணிதிரண்டு சென்று கோரிக்கைகளின் பேரில் அரசின் கவனத்தை ஈர்க்கவும், விரைந்து அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கவும், பேச்சுவார்த்தைக்கு அழைத்திடவும் வலியுறுத்தி மனு அளிக்க உள்ளது. எனவே தமிழக மக்களின் வாழ்வாதார பிரச்னைகளின் பேரில் அரசின் கவனத்தை ஈர்க்க நடத்தப்படும் இந்த பிரச்சார இயக்கத்தில் அரசு ஊழியர்களுடன் பொதுமக்களும் கலந்து கொண்டு ஆதரவு அளிக்க கேட்டுக்கொள்கிறோம்.

## ஐந்து முனைகளிலிருந்தும் திரளுவோம் ஓரணியாய்!

## கோட்டை நோக்கி செல்வோம் பேரணியாய்!

### 11-11-2019 முதல் 15-11-2019 வரை தமிழகம் தழுவிய

# ஊழியர் - மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கம்

### துவங்குமிடம் மற்றும் பிரச்சார இயக்கம் நடைபெறும் மாவட்டங்கள்

| | பிரச்சார இயக்கம் துவங்குமிடம் | பிரச்சாரக் குழு தலைவர்கள் மற்றும் வழிநடத்தும் நிர்வாகிகள் | பிரச்சார இயக்கம் நடைபெறும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | இராமேஸ்வரம் | மு.அன்பரசு, மாநிலத் தலைவர்<br>இரா.ந.நம்பிராஜன், மாநிலச் செயலாளர்<br>தெ.வாசுகி, மாநிலச் செயலாளர் | இராமநாதபுரம்<br>மதுரை, சிவகங்கை<br>புதுக்கோட்டை<br>திருச்சி, கரூர் |
| 2. | களியக்காவிளை (குமரி) | ஆ.செல்வம், பொதுச் செயலாளர்<br>ஆர்.மங்களபாண்டியன்,<br>மாநில துணைத் தலைவர்<br>சி.எஸ்.கிறிஸ்டோபர், மாநில செயலாளர் | கன்னியாகுமரி<br>திருநெல்வேலி<br>தூத்துக்குடி, விருதுநகர்<br>தேனி, திண்டுக்கல் |
| 3. | வேதாரண்யம் | மொ.ஞானத்தம்பி,<br>மாநில துணைத் தலைவர்<br>உ.சண்முகம், மாநிலச் செயலாளர்<br>என்.வெங்கடேசன்,<br>மாநில துணைத் தலைவர் | நாகப்பட்டினம்<br>தஞ்சாவூர், திருவாரூர்<br>அரியலூர், பெரம்பலூர்<br>கடலூர் |
| 4. | கூடலூர் (நீலகிரி) | சி.ஆர்.இராஜகுமார், மாநிலச் செயலாளர்<br>மு.சீனிவாசன், மாநில துணைத் தலைவர்<br>சி.பரமேஸ்வரி, மாநிலச் செயலாளர் | நீலகிரி, கோவை<br>திருப்பூர், ஈரோடு<br>சேலம், நாமக்கல் |
| 5. | ஓசூர் | மு.பாஸ்கரன், மாநிலப் பொருளாளர்<br>ஏ. பெரியசாமி, மாநில துணைத் தலைவர்<br>கோ.பழனியம்மாள்,<br>மாநில துணைத் தலைவர் | கிருஷ்ணகிரி<br>தருமபுரி, வேலூர்<br>திருவண்ணாமலை<br>காஞ்சிபுரம், திருவள்ளூர்<br>விழுப்புரம் |

# ஒத்துழையாமை இயக்கம் உந்தித் தள்ளிய ரஷ்யப்புரட்சி

பெரணமல்லூர் சேகரன்



"**ஆ**கா என்றெழுந்தது பார் யுகப்புரட்சி" என மகாகவி பாரதியால் புகழ்ந்து பாடப்பட்ட ரஷ்யப் புரட்சி நூற்றாண்டை நிறைவு செய்துள்ளது. சோவியத் ரஷ்யாவில் சோஷலிசம் மலர்ந்து ஒரு தலைமுறை பிறப்பு முதல் இறப்பு வரை மண்ணில் சொர்க்கம் கண்டது. ரஷ்யப் புரட்சியின் தாக்கம் இந்தியச் சுதந்திரப் போரை உந்தித் தள்ளியது. குறிப்பாக இந்திய சுதந்திரப் போரில் கையாளப்பட்ட ஒத்துழையாமை இயக்கம் வலுப்பெற ரஷ்யப்புரட்சி கிரியாவூக்கியாகத் திகழ்ந்தது எனின் மிகையன்று.

இந்தியாவில் முதல் ஒத்துழையாமை இயக்கம் ரஷ்யப் புரட்சிக்குப்பின் துவங்கியது. அதில் பங்கேற்றவர்கள் மற்றும் அமைப்பாளர் களுக்கு ஏமாற்றம் அளிக்கும் விதத்தில் அது உரிய காலத்திற்கு முன்பே நிறுத்தப்பட்டது. அந்த ஆண்டுகளில் ரஷ்யப் புரட்சியானது அனைத்து சிரமங்களையும் மீறி தன்னை வெற்றிகரமாகப் பலப்படுத்திக் கொண்டது.

ரஷ்யர்களின் வெற்றிக்கும் இத்தியர்களின் தோல்விக்குமிடையே ஒப்பீடு செய்வது தவிர்க்க முடியாதது. காந்தியின் தலைமை யிலான திட்டம், நீண்டகால நடைமுறைக் கொள்கை, உடனடி நடைமுறைக் கொள்கை ஆகியவற்றை லெனினிய கருத்துக்களோடு விமர்சனரீதியாக மறுமதிப்பீடு செய்வதற்கு இட்டுச் செல்கிறது. லெனினிய நூல்களை ஆங்கிலேயர்கள் தடை செய்து கைப்பற்றி னாலும் அவை இந்தியாவிற்குள் வந்து கொண்டே இருந்தன. அவற்றின் செல்வாக்கு அக்கால இடதுசாரி ஏடுகளின் விமர்சனரீதியான கருத்துக்களில் தெளிவாகத் தெரியும்.

பர்தோலி தீர்மானம் மூலம் காங்கிரஸ் தலைமையானது தேசிய எழுச்சி மேலோங்கி யிருக்கையில் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தியதானது அந்த எழுச்சியைத் தகர்த்து விட்டது. இது காங்கிரசை மக்களிடமிருந்து தற்காலிகமாக தனிமைப்படுத்தியது. சுயராஜ்ஜியத்திற்காக காங்கிரஸ் போராட்டத் தின்மீது தங்களுடைய நம்பிக்கை முழுவதை யும் வைத்திருந்த உழைக்கும் மக்களின் இதயங்களை உடைத்தது. அவர்கள் உருவாக்கிய அமைப்புகளை சுக்கு நூறாக்கியது. ஒளி பாய்ச்சிய புதிய லெனினிய ஒளியில் இந்திய இடதுசாரி பத்திரிக்கைகள் துணிச்சலாக எழுதின.

"விவசாயிகள், சாகுபடியாளர்கள், தினக் கூலித் தொழிலாளர்கள், ஆகியோர் நமது தரப்பில் இருந்தால் ஒழிய நாம் எதையும் செய்ய இயலாது. அதிகபட்சமாக நாம் சிறிது கூச்சல் போட்டு மற்றொரு தவணை சீர்திருத்தம் பெறலாம்; ஆனால் நாட்டின் சுதந்திரம் என்பது ஒருபோதும் அந்த வழியில் வரப்போவ தில்லை."

"இந்துஸ்தானம் (இந்தி மொழி பேசும் பிராந்தியங்கள்) முழுவதும் விவசாய அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ராஜ்புதனாவில் மக்கள் தங்கள் முழுப் பலத்தையும் கொண்டு ஜமீன்தாரர்களின் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட

ஆரம்பித்துவிட்டனர். ஆனால் அந்த மக்கள் அனைத்து வேதனைகளையும் அமைதியாக, பொறுமையாகத் தாங்கிக் கொள்ள வேண்டு மென்றும், அடுத்த பிறவியில் நல்ல வழி தேடவேண்டுமென்றும் அவர்களுக்கு ஆலோசனை கூறி காங்கிரஸ் அதனுடைய கடமையை முடித்துக் கொண்டது. அவர்களுடைய வேதனையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான ஒரு முயற்சி கூட காங்கிர சின் வேலைகளில் இடம் பெறவில்லை."

*(ஆத்ம சக்தி ஜுலை 17, 1922)*

ஆத்ம சக்தி 1922 ஜுலை இறுதியில் ஒரு எச்சரிக்கையை எழுப்பியது. அதாவது இந்திய அரசாங்கம் ஏற்கெனவே தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் பங்கை நன்கறிந்து உள்ளதென்றும், விவசாயிகளின் நிலைமை களை மேம்படுத்துமாறு தாலுக்தார்கள் மீது சில நிர்ப்பந்தம் செலுத்துகிறதென்றும் இதன் மூலம் கிராமப்புறத் தலைவர்களாக உருவெடுத்துள்ளதென்றும் அரசாங்க ஆதரவு நபர்கள் தொழிற்சங்கங்களை உருவாக்கு கிறார்கள் என்றும் தொழிலாளர் தலைவராக செயல்படுகிறதென்றும் அது மேலும் கூறியது: "அதன் உண்மையான நோக்கமானது மக்களுக்கும் தடுத்தர வர்க்கங்களுக்குமிடையே எவ்வித இணைப்பும் இல்லாது பார்த்துக் கொள்வதுதான்."

இடதுசாரிகள் மிகவும் துணிச்சலுடன் வெளிப்படையாகப் பேசுபவர்களானார்கள்.

"காவல் காப்பு வரி மற்றும் உப்பு வரியை நிறுத்துவதென்று நீங்கள் கூறியபோது மக்கள் உடனே உங்களுக்கு செவி சாய்த்தார்கள். ஆனால் சௌரிசௌரா சம்பவம் எத்தினத்தில உங்கள் துணிவை எடுத்துவிட்டதோ அப்பொழுது நீங்கள் வெறும் வாய்ச்சவடால் காரர்கள் மட்டுமே, மிகமோசமான ஊழியர்கள் என்றும் மக்கள்புரிந்து கொண்டனர். உண்மை என்னவென்றால் நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பது போல நீங்கள் ஒன்றும் மகத்தானவரகள் அல்ல"

"நாடு தயாராகவில்லை என்று சொல்வது ஒரு பொய். நீங்கள்தாம் தயாராக இல்லாமல் இருக்கிறீர்கள். எந்தளவுக்கென்றால் உங்க ளுடைய உடைமைகள் மீதான பற்றைத் துறக்க இயலாத அளவிற்கு"

*( ஆத்ம சக்தி நவம்பர் 15, 1922)*

சோஷலிஸ்ட் இதழ் ஆகஸ்ட்26, 1922 ல் இவ்வாறு எழுதியது:

"காங்கிரஸ் தீர்மானங்களை அமுலாக்காத தற்காக பலர் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஆனால் அமிர்தசரஸ் மற்றும் நாக்பூர் காங்கிரஸ்களில், தொழிலாளர்களை அணி திரட்டும் பணியில் காங்கிரஸ்காரர்கள் ஈடுபட வேண்டுமென்று வலியுறுத்தி நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களை காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் முற்றிலும் மறந்து விட்டனர்"

வெகுஜன சத்யாக்கிரக இயக்கம் நிறுத்தப் பட்டதைத் தொடர்ந்து பரவலான அதிருப்தி தோன்றியது. எனினும் அது, தோல்வி மனப்பான்மைக்கோ சோர்வுக்கோ இட்டுச் செல்லவில்லை. தேசிய இடதுசாரிகள் திட்ட அடிப்படையிலான போரைத் தொடங்கினர்; அதுஉடைக்க முடியாத எப்பொழுதும் செயல்படக் கூடிய நெம்புகோலாக இருந்தது. அது படிப்படியாக அரசியல் நிலையை உயர்த்தியது.

சி.எஸ்.ரங்கா அய்யர் தமதுஆங்கில வார ஏடான சுதந்திரத்தில் புதிய உணர்வை இவ்வாறு வெளிப்படுத்தினார்;

" காங்கிரஸ் இதுவரை முழுச்சுதந்திரம் தான் தங்கள் லட்சியம் என்பதை நிச்சயிப்பதற்குத் தவறிவிட்டது. ஏனெனில் அது நடுத்தர வர்க்கங்களால் அதிக்கம் செலுத்தப்பட்டது. இவர்களில் பெரும்பாலானோர் ஐரோப் பாவைக் காப்பியடிக்கும் குரங்குகளாவர். பேயைப் பேய் என்று அழைக்க அச்சப்படாத பண்டைய பாரம்பரியத்திலிருந்து வந்த எளிய இதயங் கொண்ட மக்களின்ஆக்கப்பூர்வ சக்தியை காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டுமானால் அது தன் அணியிலிருந்து அரசியல்வாதிகள், ராஜீயவாதிகள் போன் றோரைக் களை எடுக்க வேண்டும்."

காங்கிரஸ்காரர்களால் நடத்தப்பட்ட ஒரு வெகுஜன வங்காளி ஏடு "சிரமிக்" தன்னுடைய இதழில் தொழிலாளி வர்க்கத்தின் அதிகரித்து வரும் உணர்வையும் அதனுடைய வரலாற்றுப் பங்கினையும் வெளிப்படுத்த பாரம்பரிய புராண மரபுச் சொற்றொடர்களையும், கற்பனை வடிவங்களையும் சக்தி வாய்ந்த முறையில் பயன்படுத்தியது.ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக...

"வா! ஓ! ருத்ரா வா!அரக்கனை உன்தலை கொண்டு மோதித்தாக்கு! உன்வலுவான ரத்தம் தோய்ந்த ஆசீர்வாதத்தைஎன்தலையில் ஏந்துவேன், முழுநிலவு தினம் சிவப்பாகட்டும். எப்போதும் உயிரற்றுப் போனவர்களுக்கும் தினம் தினம் உயிரை அர்ப்பணிப்பவர்களுக்கு சாவைப்பற்றி அச்சமேது"

இவ்வாறு 1920ஆம் ஆண்டுகளின் முதல் ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து 1930 ஆம் ஆண்டுகளின் இரண்டாவது சட்டமறுப்பு இயக்கத்திற்கு முன்னேறும் பயணத்திற்கு அடித்தளமிடப்பட்டது; இது ஒரு உயர்ந்த, அரசியல் ரீதியாக மிகவும் முன்னேறிய மற்றும் நன்றாக அணிதிரட்டப்பட்ட அடிப்படையில் நடத்தப்பட்டபோராட்டமாகும். இந்திய வரலாற்று வளர்ச்சியின் முழுப் பாதைக்கும் லெனினியக் கருத்துக்களின் தாக்கம் புதிய வாழ்வையும் திசை வழியையும் கொடுத்தது.

*(நவம்பர் 7 ரஷ்யப்புரட்சி தினம்)*

## கருவூல கணக்குத் துணை ஆணையரிடம் முறையீடு ஆர்ப்பாட்டம்

கருவூலத்துறையில் தற்போது IFHRMS திட்டத்தினை அமுல்படுத்தி வருவதும், அதில் முன்னோட்டமாக கரூர் மாவட்டத்தில் ஆரம்பித்து மேற்படி திட்டத்தின் கீழ் பட்டியல்களை அனுமதிப்பது சார்ந்த பணிகள் துவங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் பல்வேறு குளறுபடிகள் இருந்துவருவதால் எவ்விதப் பட்டியல்களையும் தயார் செய்ய இயலாத சூழ்நிலை உருவானது. மேற்படி திட்டத்தில் பட்டியல் தயாரித்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்று கருவூலத் துறையால் நிர்ப்பந்திக்கப்பட்டதால் கடந்த ஒரு மாதகாலமாக எவ்விதமான பட்டியல்களும் கருவூலத்துறையில் அனுமதிக்கப்படவில்லை.

இதனால் அனைத்துத்துறை ஊழியர்களும் கடுமையான மனஉளைச்சலில் இருந்து வந்தனர். பல ஊழியர்களுக்கு விழா முன்பணப் பட்டியல், பொது வைப்பு நிதி முன்பணப் பட்டியல், ஒப்படைப்பு ஊதியப் பட்டியல் பெறப்படாததால் தீபாவளிப் பண்டிகையினை கொண்டாட இயலாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இந்நிலையில் இத்திட்டம் குறித்து ஆய்வு செய்ய கரூர் மாவட்டத்திற்கு கருவூல கணக்குத் துறை ஆணையர் தென்காசி ஜவகர் கடந்த 10.10.2019 அன்று வருகை புரிந்தார். அன்றைய



தினம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள், வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் நூற்றுக்கணக்கில் ஊழியர்களை திரட்டி இத்திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தும் வரை பழைய முறையிலேயே பட்டியல்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இக்கோரிக்கையினை ஏற்று உடன் அனைத்துப் பட்டியல்களையும் பெற்று அனுமதிக்க வேண்டும் என உத்திர விட்டார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் பொன்.ஜெயராம், ஆர்.தாமோதரன், கே.கருணாகரன், ஆர்.கண்ணன், எம்.செல்வராணி, வட்டக்கிளை நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

❑

# மாத்தி போதி!

**ச**மீபத்தில் சீன அதிபரும் இந்தியப் பிரதமரும் இருநாட்டு உறவுகள் குறித்து பேச தங்கள் சந்திப்புக்காக மாமல்லபுரத்தினை தேர்ந் தெடுத்தபோது மாமல்லபுரம் மீண்டும் ஒருமுறை உலகப்புகழ் பெற்றது. பண்டைகாலத்தில் சீனத்திற்கும் தமிழகத்திற்கும் இருந்துள்ள வணிகத்தொடர்புகள், யுவான்சுவாங் தமிழகம் வந்திருந்து காஞ்சியில் புத்தமடம் நிறுவியது, இங்கிருந்து போதிதர்மர் சீனாவுக்குச் சென்று யோகக்கலையை பரப்பிய வரலாறு, தமிழகத்தின் சிற்பிகள் சீனாவுக்குச் சென்று அங்கு கோவில் கட்டிய செய்திகள், இத்யாதி இத்யாதிகளை வலைத்தளத்தின் மூலம் பார்க்கநேர்ந்தபோது சீனத்து இலக்கியத்தையும் பழங்கதைகளையும் கவிதைகளையும் படிக்க நேர்ந்தது. அவர்களுடைய பெரும்பான்மையான கதைகளும் கவிதைகளும் பொதுவுடைமையையும், தோழமையையும், சமத்துவத்தையும் பேசுவன வாக இருக்கின்றன. நம் ஊரில் புழக்கத்தில் உள்ள பாட்டி வடை சுட்ட கதையும், பொருள் தன் வரலாறு கூறுதல் கட்டுரைகளும் அங்கேயும் உள்ளன. ஆனால் அவற்றின் உள்ளடகத்திற்கும் நம்ம ஊர் கதை கட்டுரைகளின் உள்ளடக்கத் திற்கும் உள்ள வித்தியாசம் முற்றிலும் வேறாக உள்ளது.

நம்ம ஊரில் நமக்கு போதிக்கப்பட்ட பாட்டி வடைசுட்ட கதையில் பாட்டி வடை சுட்டுக் கொண்டிருப்பாள். காகம் வந்து பாட்டியிடம் வடை கேட்கும். பாட்டி தரமறுத்துவிடுவாள். பாட்டி சுட்ட வடையை ஆட்டைபோட அவள் அசரும் நேரம் பார்த்து காகம் காத்திருக்கும். பாட்டி அசந்த நேரம் வடையை கவ்வி பறந்துபோய் ஒரு மரக்கிளையின் மீது உட்காரும். அந்தநேரம் பார்த்து நரி அங்கே வரும். “காக்கா காக்கா,,,நீ ரொம்ப அழகா இருக்கே நீ பாட்டு பாடினா இனிமையா இருக்கும் ஒரு பாட்டு பாடேன்.’’ என்று கேட்கும். காகம் வடையை தன் காலின் கீழ் வைத்துக்கொண்டு பாட ஆரம்பிக்கும். நரி “ஆஹா பேஷ் பேஷ். என்ன இனிமையான குரல்.’’ என்று பாராட்டிவிட்டு “காக்கா நீ ரொம்ப நல்லா



டான்ஸ்கூட ஆடுவேன்னு சொன்னாங்க. கொஞ்சம் ஆடிக்காட்டேன்’’ என்று கேட்க புகழ்ச்சியில் மெய்மறந்த காகம் டான்ஸ் ஆட காலைத்துாக்க வடை கீழே விழும். நரி அதை அப்படியே தன்வாயில் காட்ச் பிடித்துக்கொண்டு காட்டுக்குள் ஓடிவிடும். காகம் ஏமார்ந்து போகும்.

இந்த கதை நமக்கு ‘காகம் ஏமார்ந்த கதை’, ‘நரியின் தந்திரம்’, ‘ஏமாற்றாதே ஏமாறாதே’ என்று ஏதாவது ஒரு நீதியின் கீழ்போதிக்கப்பட்டிருக்கும். அதாவது ‘புகழுரைக்கு மயங்காமல் எப்போதும் ஒரேநிலையில் இருக்க வேண்டும்’, ‘தந்திரம் எனும் சாணக்கியத்தனம் தெரிந்திருக்க வேண்டும்’. ‘நீ ஒருவரை ஏமாற்றினால் உன்னை ஏமாற்ற ஒருவர் இருப்பார்’ இவற்றில் ஏதேனும் ஒரு நீதியில் நம் பாட்டி கதை சொல்லியிருப்பாள்.

ஆனால் சீனத்து பாட்டிகதையில் பாருங்கள், பாட்டி வடை சுடுகிறாள். காகம் வந்து வடை கேட்கிறது. “சும்மா வடை கேட்டால் எப்படி தருவது? போய் சுள்ளிகளை எடுத்து வந்து போடு உனக்கு வடை தருகிறேன்.’’ என்கிறாள் பாட்டி. காகமும் அருகில் உள்ள மரம் செடி கொடிகளில் சென்று காய்ந்த சுள்ளிகளைக் கொண்டு வந்து போடுகிறது. ஓரளவுக்கு ஒரு வடையின் விலைக்குத் தேவையான சுள்ளிகள் சேர்ந்ததும் காகத்திடம் வடையை கொடுக்கிறாள் பாட்டி. காகம் மகிழ்ச்சியுடன் அதை வாயில் கவ்விக் கொண்டு மரக்கிளையில் உட்காருகிறது.

இங்கேயும் அந்நேரம் பார்த்து நரி வருகிறது. காகத்தை பாடச்சொல்லி கேட்கிறது. காகமும் வடையை தன் காலின் கீழ் வைத்துக்கொண்டு பாடுகிறது. நம்ம ஊர் பாட்டிக்கதையில் வருவதைப் போலவே நரி காகத்தை டான்ஸ் ஆடச்சொல்லி கேட்க காகம் டான்ஸ் ஆட காலைத்தூக்க, வடை கீழே விழுகிறது நரி அதை கவ்விக்கொண்டு போக எத்தனிக்க காகம், ''நரியே அது நான் உழைத்து சம்பாதித்த வடை நீ ஏமாற்றி பிடுங்கக்கூடாது. அதை என்னிடம் கொடுத்து விடு.'' என்று கேட்கிறது. நரியோ அதை கொடுக்க மறுத்து காட்டுக்குள் ஓட எத்தனிக்க காகம் கா...கா... என்று கரைந்து தன்னுடைய கூட்டத்தை அழைக்கிறது. காகத்தின் அபயக் குரலைக் கேட்ட மற்ற காகங்கள் அங்கே ஒன்று சேர்ந்து நரியைச் சுற்றி வளைக்கின்றன. நூற்றுக் கணக்கான காகங்கள் ஒன்றுகூடியதால் நரியால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அது வடையை போட்டுவிட்டு காட்டுக்குள் ஓடிவிடுகிறது.

இந்தக்கதையின் உள்ளடக்கம் இதுதான். பாட்டியிடம் வடை கேட்ட காகத்திடம் பாட்டி சும்மா எப்படி தருவது என்று கேட்டு விட்டு காகத்திடம் சுள்ளிகளை கொண்டு வந்து போடச் சொல்கிறாள். இது 'உழைத்து வாழ வேண்டும்' என்ற தத்துவத்தை உணர்த்துகிறது. காகம் ஓரளவுக்கு சுள்ளிகளைப் போட்டதும் காகத்திடம் வடையை கொடுக்கிறாள். இது 'உழைப்பிற்கேற்ற ஊதியம்'. காகம் நரி சொன்னபடி பாட்டுபாடுவதும் டான்ஸ் ஆடுவதும் பிற உயிர்களிடம் வைத்திருக் கும் 'நம்பிக்கை'. நரி காகத்தை ஏமாற்றி வடையைக் கவ்வுவது 'உழைப்புச் சுரண்டல்'. காகம், அந்த வடை தான் உழைத்து பெற்றது எனக்கூறி அதைத் தன்னிடம் திரும்பக் கொடுத்துவிடுமாறு நரியிடம் கேட்பது அந்த வடையின் பேரில் காக்கைக்கு உள்ள 'உரிமை'. நரி அதை தரமறுப்பது 'ஏதேச்சிகாரம்'. காகம் தன் கூட்டத்தை அழைத்து நரியிடம் நடத்துவது 'உரிமைப் போராட்டம்'. நூற்றுக்கணக்கான காகங்கள் ஒன்றுகூடியதும் நரி தன் வாயில் கவ்வியிருந்த வடையை கொடுத்துவிடுவது 'ஒன்றுபட்ட உரிமைப் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி'. சீனத்து பாட்டி வடை சுட்ட கதையில் பொதிந்திருக்கும் பொதுவுடைமைக் கோட்பாடு நம்மை புல்லரிக்க வைக்கிறது.

இதேபோல நம்மூரில் மரம் தன் வரலாறு கூறுதல், சிலை தன் வரலாறு கூறுதல், யானை தன் வரலாறு கூறுதல் போன்றவற்றை கட்டுரை களாக பாடங்களில் வைத்திருக்கிறோம். இந்த தன்வரலாறு கூறும் கதைகளில் மரமோ சிலையோ பேசினால் பெரும்பாலும் தான் செய்யும் தியாகம் பற்றியும், மனிதர்கள் தனக்கு செய்யும் தீங்கு பற்றியும், தான் எப்படி காப்பற்றப்பட வேண்டும் என்பது பற்றியும்தான் கட்டமைப்பு இருக்கும். சீனத்தில் கிட்டத்தட்ட இதே போன்ற தன் வரலாறு கூறுவது போன்ற கட்டமைப்பில் ஒரு கவிதையைப் படிக்க நேர்ந்தது. குடையிடம் ஒரு இளைஞன் பேசுவதுபோன்ற கவிதை அது. இளைஞன் கேட்கிறான், "குடையே உனக்கு கவலை தரும் செயல் எது மழையில் நனைவதா? வெயிலில் காய்வதா?'' அவன் கூறுவதைக் கேட்ட குடை மெல்லியதாக புன்னகைத்து சொல்கிறது, "என் கவலை அதைப்பற்றியது அல்ல. அதைப் பற்றி நான் நினைப்பதும் அல்ல,'' குடையின் பதிலைக்கேட்டு இளைஞன் ஆச்சர்யப்படுகிறான். "அப்படியானால் உன் கவலை எதைப்பற்றியது?'' என்று வினவுகிறான். அதற்கு குடை சொல் கிறது,'' என் கவலையெல்லாம் எப்படிப்பட்ட பேய் மழையானாலும் என் மக்களை நனைய விடக் கூடாது, எப்படிப்பட்ட கடும் வெயிலானாலும் என் மக்களை காய விடக்கூடாது.'' இந்தக் கவிதையில் முழுக்க முழுக்க அர்ப்பணிப்பு உணர்வும் தோழமை மனப்பான்மையும் எப்படி கொப்பளிக் கிறது பாருங்கள். தன்னைப்பற்றி கவலைப் படாமல் தலைமுறைக்காக கவலைப்படும் தோழமைச் சித்தாந்தம் அது.

சீனா இன்று அமெரிக்காவுக்கு சவால் விடும் அளவிற்கு வளர்ந்து நிற்கிறது என்றால் பொது வுடைமைக் கொள்கைகளும் கோட்பாடுகளும் அடிப்படையிலிருந்தே போதிக்கப்படுவது கூட ஒரு பெரிய காரணமாக இருக்கலாம். "வேப்ப மர உச்சியில் நின்னு பேயொன்னு ஆடுதுன்னு விளையாடப்போகும் போது சொல்லி வைப்பாங்க. உந்தன் வீரத்தை கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க.'' என்று பட்டுக்கோட்டையார் பாடிக் காட்டிய மூடத்தனங்களை முற்றிலுமாக அகற்றி, நம்முடைய நாட்டை ஊழலற்ற, பொது வுடைமைச் சார்ந்த, சமத்துவ சமுதாயமாக மாற்ற நாம் எல்லாரும் நம்முடைய குழந்தைகளுக்கு இனி மாத்தி போதிக்க வேண்டியது அவசிய மாகும்.

**- ஜிஜி**

# தேர்தல் சீர்திருத்தம் - அவசியத் தேவை

இரா.மங்களபாண்டியன்

## ஜனநாயகம்

நாம் அனைவரும் நம்முடைய ஜனநாயகத்தின் மீது மிகவும் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறோம். நாம் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்திவரும் நம் அரசமைப்புச் சட்டம் நமக்கு 'ஒரு மனிதர் ஒரு வாக்கு' அல்லது 'ஒரு நபர் ஒரு வாக்கு' மற்றும் 'ஒரு வாக்கு ஒரு மதிப்பு' ('one man, one vote' or 'one person, one vote' and 'one vote, one value) என்பனவற்றை உத்தரவாதப்படுத்தி இருக்கிறது.

இந்த அரசியல் சமத்துவம், நம் தேர்தல் நடைமுறைகளின் மூலமாக நமக்கு நடைமுறையில் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. நம் தேர்தல் நடைமுறைகள் குறைபாடு உடையவையாக இருப்பின், எப்போதும் அவற்றைச் சரிசெய்து அதனை மெருகூட்ட வேண்டியது அவசியத் தேவையாகும். இதனை கடந்த பல ஆண்டுகளாக கொஞ்சம் கொஞ்சமாக மெருகேற்றி வந்திருக்கிறோம்.

எனினும், இப்போது, மக்களின் ஜனநாயக அபிலாசைகள் உருக்குலைக்கப்படுவதைத் தடுத்து நிறுத்திட வேண்டுமானால் நாட்டின் தேர்தல் நடைமுறைகளில் மிகப்பெரிய அளவில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டியது அவசியமாகும். மக்களின் ஜனநாயக அபிலாசைகள், பணபலம் மூலமாகவோ அல்லது புஜபலம் மூலமாகவோ அல்லது மதவெறியைக் கிளப்பியோ அல்லது, சாதி வெறியைக் கிளப்பியோ உருக்குலைத்திடக் கூடாது. இத்தகைய நடைமுறைகளின் மூலம் இப்போது ஜனநாயகத்திற்குப் பேராபத்து ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய நலிந்த தளர்ந்த நிலைகளை நாம் சரி செய்திட வேண்டியிருக்கிறது.

நாம் நம்முடைய தேர்தல் நடைமுறையைச் சரிசெய்ய வேண்டியிருக்கிறது. எப்படிச் சரி செய்யப்போகிறோம்? நம்முடைய தேர்தல் நடைமுறையிலும், நம்முடைய அமைப்பிலும் ஏற்பட்டுள்ள ஜனநாயக சிதைவுகளைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். அவற்றை எப்படித் தடுத்து நிறுத்தப் போகிறோம்.

தற்போது மத்திய அரசாங்கம். இரு முன்மொழிவுகளை இது தொடர்பாக ஏற்படுத்தி இருக்கிறது. தேர்தலில் பண பலம் மற்றும் தேர்தல் நடைமுறைகளில் பணத்தின் செல்வாக்கு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக அந்த முன்மொழிவுகள் என்ன சொல்கின்றன? முதலாவதாக, அரசியல் கட்சிகளுக்கு நன்கொடைகள் அளிப்பது என்பது இருபதாயிரம் ரூபாயிலிருந்து ஈராயிரம் ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக, அரசின் சார்பில் தேர்தல் பத்திரங்கள் வெளியிடப் போகிறார்களாம். மக்கள் அவற்றை வாங்க முடியுமாம். அவற்றை அவர்கள் அரசியல் கட்சிகளுக்குக் கொடுக்க முடியுமாம். அரசியல் கட்சிகள் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முடியுமாம்.

இவ்வாறு அரசு கொண்டுவந்துள்ள முன்மொழிவுகள் இரண்டுமே வெறும் கண்துடைப்புகளாகும். கண்துடைப்பு மட்டுமல்ல, பண மோசடி மேற்கொள்வதற்கு மேலும் வாய்ப்புவாசல்கள் திறந்துவிடப்பட்டிருக்கின்றன எனக் கூற முடியும்.

இருபதாயிரம் ரூபாய் என்பதை ஈராயிரம் ரூபாய் என்று மாற்றியதால் என்ன நடக்கப் போகிறது. ஒருவர் இருபதாயிரம் ரூபாய் கொடுத்தார் என்றால் இனி அதை பத்துப் பேர் பெயர்களில் பதிய வைத்துக் கொள்ளப் போகிறார்கள். வேறன்ன பெரிய வித்தியாசம் வந்துவிடப்போகிறது? இது ஒரு கேலிக் கூத்தாகும். அடுத்து, தேர்தல் பத்திரங்களை எடுத்துக்கொள்ளுங்கள். யார் அவற்றை வாங்குகிறார்கள்? யாருக்குக் கொடுக்கிறார்கள்? அனைத்தும் ரகசியம். அன்றையதினம் ஆட்சியில் உள்ளவர்களைத் தவிர

வேறெவருக்கும் அது குறித்துத் தெரிய போவதில்லை.

ஆட்சியிலுள்ளவர்கள் அதனை சாக்காக வைத்துக்கொண்டு, 'ஏன் அவர்களுக்கு அவ்வளவு பணம் கொடுத்திருக்கிறீர்கள்? " என்று மிரட்டுவதற்கு வேண்டுமானால் அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.எனவே இது ஒன்றும் சீர்திருத்தம் அல்ல. தேர்தல் நடைமுறைகளை மேலும் சிதைப்பதற்கே இது வழி திறந்துவிடும். தேர்தலில் பணபலத்தின் பங்கினைக் குறைத்திட வேண்டும் என்று உண்மையிலேயே விரும்பினால், அரசியல் கட்சிகள் செய்திடும் செலவினங்களுக்கு வரம்பினைக் கொண்டு வரவேண்டும். வேட்பாளர்களுக்கு செய்திருப்பதைப் போல அரசியல் கட்சிகளுக்கும் செலவினத்திற்கான வரம்பை உயர்த்த வேண்டும். ஆனால் அரசியல் கட்சிகள் தாங்கள் செய்திடும் செலவினங் களுக்கு வரம்பு விதிக்கப்படவில்லை என்றால், தேர்தலில் பணபலத்தின் செல்வாக்கைக் கட்டுப்படுத்திட முடியாது.

அடுத்து கார்ப்பரேட்டுகள் அரசியல் கட்சிகளுக்கு நிதி அளிப்பது தொடர்பாக. கார்ப்பரேட்டுகள் ஒத்துழைக்கட்டும். இந்தியாவின் ஜனநாயக அமைப்பு முறைக்கு அவர்கள் ஒத்துழைத்திட வேண்டும். இந்திய ஜனநாயகம் செயல்படுவதற்கு அவர்களின் பங்களிப்பு அவசியம். அவர்கள் தாங்கள் அளித்திடும் பங்களிப்பை அரசிடம் அளித்திடட்டும். அரசாங்கம் அதனை தேர்தல் ஆணையம் மூலமாகவோ அல்லது வேறெந்த ஏஜன்சி மூலமாகவோ மேலாண்மை செய்து, நிர்வகிக்கட்டும். இதனை இந்திஜித் குப்தா ஆணையம் பரிந்துரைத்திருந்தது. இதனை அமல்படுத்துவதற்கு இது மிகவும் சரியான தருணமாகும். அரசின் சார்பில் செலவினம் என்பது ரொக்கமாக இருக்கக்கூடாது. அவை பொருள்களாக இருந்திட வேண்டும். வாகனங்கள்,ஓட்டுநர்கள், பெட்ரோல் அல்லது எரிபொருள் நிரப்பப்படுதல், போஸ்டர்கள் போன்றவையாக இருந்திட வேண்டும். இவை அங்கீகரிக்கப்பட்ட மாநில மற்றும் தேசிய கட்சிகளுக்கு அளிக்கப்படவேண்டும். இவ்வாறு அரசின் மூலமாகவே அனைத்தையும் செய்ய வேண்டும்.

மேற்கத்திய நாடுகளிடம் இந்த நடைமுறை இருக்கிறது. இது ஒன்றும் உலகில் புதிதாக நடைபெறும் விஷயம் அல்ல.

நம்முடைய ஜனநாயகம் குறித்து ஒரு விஷயத்தில் நமக்கு எப்போதுமே பெருமிதம் உண்டு அமெரிக்க குடியரசுத் தலைவர் ஒபாமா நம்நாட்டிற்கு முதன்முறை வந்தபோது நம்முடைய தங்கப் புத்தகத்தில் (golden book) என்ன எழுதினார் என்பதை நினைவுகூறலாம். உண்மையில் தங்கத்திற்கும் அதற்கும் எந்த சம்பந்தமுமில்லை நம்முடைய நாடாளுமன்ற சென்ட்ரல் ஹாலில் அதனை வைத்திருப் போம். அதன் பெயர் அவ்வாறு இருந்து வருகிறது. வெளிநாடுகளிலிருந்து வரும் அரசியல் தலைவர்கள் அதில் தங்கள் கருத்தைப் பதிவு செய்வார்கள். அதில் அவர் 'உலகின் மிகப் பழைமையான ஜனநாயகத்திலிருந்து உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்திற்கு வாழ்த்துக்கள்' ('Greetings from the world's oldest democracy to the world's largest democracy') என்று எழுதினார். ஆனால் அது சரியான கருத்தல்ல அமெரிக்காவில் அனை வருக்கும் வாக்குரிமை அளிக்கப்படுவதற்கு ஓராண்டுக்கு முன்பு தான் ஒபாமா பிறந்தார். அதாவது, அமெரிக்காவில் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது 1962 இல், அவர் பிறந்தது 1961இல். 1962க்கு முன்பு அமெரிக்கா வில் ஆப்ரிக்க-அமெரிக்கர்களுக்கு வாக்குரிமை கிடையாது. ஆனால் நாம் எப்போது சுதந்திரம் வாங்கினோமோ அப்போதே அனைவருக்கும் வாக்குரிமை அளித்துவிட்டோம். இது நம் ஜனநாயகத்தின் பெருமிதம் ஆகும்.

ஆனால் அதனை நாம் எங்ஙனம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்? நாம் அதனை தேர்தல் நடைமுறைகள் மூலமும், தேர்தல் அமைப்பு மூலமும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் இப்போது நம்முடைய தேர்தல் நடைமுறைகள். பணபலம் போன்று பலவிதங்களில் சிதைக்கப்பட்டுக்

கொண்டிருக்கின்றன. அரசியல் கட்சிகளின் செலவினங்களுக்கு வரம்பு விதித்திடவும். அரசியல் கட்சிகளுக்கு கார்ப்பரேட்டுகள் நிதி அளிப்பதற்குத் தடை விதித்திடவும் வேண்டும். அவர்கள் நிதி அளிக்க வேண்டுமென்று விரும்பினால் அதற்காக அரசு நிர்ணயிக்கும் அமைப்பிடம் செலுத்தட்டும். அந்த அமைப்பிடமிருந்து அரசியல் கட்சிகளுக்குப் பணம் வரட்டும். இதனைச் செய்ய முடியாது என்றால், குறைந்தபட்சம், தேர்தல் நடைமுறையில் செல்வாக்கு செலுத்துவதற்கு பணத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கு சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவரவேண்டும். இன்றைய தினம் தேர்தலில் பண பலத்தைப் பயன்படுத்துவது என்பது உச்சத்திற்குச் சென்றுவிட்டது. சமீபத்திய தேர்தல்களில் இதனை நாம் நன்கு பார்த்தோம். எனவே இது முக்கியமான பிரச்சனையாகும்.

ஜனநாயகம் என்றால் என்ன? இது தொடர்பாக நாம் புரிந்து கொண்டிருப்பது என்னவெனில், பெரும்பான்மையோரின் ஆட்சி என்பதாகும். சுதந்திரம் பெற்ற பின்னர் அமைக்கப்பட்ட ஆட்சிகளுக்கு மக்களின் ஆதரவு என்பதன் நிலை என்ன தெரியுமா? இதுவரை அமைந்த எந்த ஆட்சிக்கும் மக்களின் வாக்குகள் என்பவை 50 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது கிடையாது. ஒரேயொரு தடவைதான், ராஜீவ் காந்தி ஆட்சி அமைத்த போதுதான், அவருக்கு 48 சதவீதத்திற்கு மக்கள் வாக்களித்திருந்தார்கள். அதுவும் கூட 50 சதவீதத்திற்கும் கீழ்தான்.

இப்போதுள்ள பாஜக தலைமையிலான ஆட்சி வெறும் 31 சதவீதம்தான் பெற்றிருக்கிறது. நம் அமைப்பு முறையில் யார் அதிக வாக்குகள் பெற்றிருக்கிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவர்கள் என்று உருவாக்கி வைத்திருக்கிறோம். இது நம் அமைப்பு முறையில் உள்ள பலவீனமாகும். இதனை நாம் சரி செய்தாக வேண்டும்.

ஜனநாயகம் என்றால், அது பெரும்பான்மையோரின் ஆட்சி என்றால், இது சரி செய்யப்பட்டாக வேண்டும். இது சரி செய்யப்படவேண்டுமானால், நாம் ஒரு பகுதி பிரதிநிதித்துவ ஆட்சி அமைப்பு முறைக்கு மாறிட வேண்டும். அதற்கான சரியான தருணம் இதுவாகும்.

இந்தியா என்பது பல்வேறு விதமான வேற்றுமைகளுடன் உள்ள ஒரு நாடாகும். நம்முடைய ஒவ்வொரு கலாச்சாரத்துடனும் இருக்கின்ற அனைவருமே நம் நாடாளுமன்றத்தில் பிரநிதித்துவம் செலுத்திட வேண்டும் என்று விரும்புகிறார்கள். இது நியாயமானதும் கூட. நாட்டுமக்களின் நியாயமான இந்த உணர்வை நாம் அனைவரும் மனதில் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் ஜனநாயகத்தை சிதைத்திடும் தற்போதைய அமைப்பு முறையை சரிசெய்திடவும் நாம் முன்வர வேண்டும். இதனை ஒரு பகுதி பிரநிதித்துவ ஆட்சி அமைப்பு முறையை (partial proportional representative system) கொண்டுவருவதன் மூலம் சரி செய்திட வேண்டும். இதனை எப்படிச் செய்வது?

இப்போது நாடாளுமன்ற மக்களவைக்கான இடங்கள் 542 ஆகும். இதனை சரிபாதியாக - அதாவது 271 ஆகக் குறைத்திடவேண்டும். ஒவ்வொரு மக்களவைத் தொகுதியிலும் வாக்காளர்கள் இரு வாக்குகள் அளித்திட வேண்டும். ஒரு வாக்கை, அவர் விரும்பும் அரசியல் கட்சிக்கும், மற்றொன்றை அங்கே நிற்கிற வேட்பாளருக்கும் அளித்திட வேண்டும். அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு முன்பாகவே தன் கட்சி சார்பில் எவரெவரை மக்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்திட வேண்டும் என்கிற பெயர் பட்டியலை தேர்தல் ஆணையத்திடம் அளித்திட வேண்டும். தேர்தல் ஆணையம் ஒவ்வொரு கட்சியும் பெற்றிருக்கிற வாக்கு சதவீதத்தின் அடிப்படையில் கட்சிகள் அளித்திருக்கிற பட்டியலில் இருந்து நபர்களைத் தேர்வு செய்திடும். அதே போன்று மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் மக்களவைக்கு வருவார்கள். இதன் மூலம் நாட்டின் வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பு பாதுகாக்கப்படும்.

நாட்டின் ஜனநாயக மாண்பும் நன்கு நிலை நிறுத்தப்படும். இதன் காரணமாக மக்களில் 50 சதவீத்திற்கும் அதிகமானவர்கள் வாக்களித்த கட்சி ஆட்சி அமைத்திடுவது என்பது உத்தரவாதப்படுத்தப்படும். இல்லையேல், ஜனநாயகம் என்பது பெரும்பான்மையோரின் ஆட்சி என்பதை உண்மையில் நாம் பின்பற்று வதாகக் கொள்ள முடியாது. எனவே இதனைப் பரிசீலிப்பதற்கான காலம் வந்துவிட்டது.

இவ்வாறு பிரதிநிதித்துவ அமைப்பு முறை யில் இரு அனுகூலங்கள் உண்டு. உதாரணமாக, பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடங்களை அளித்திட வேண்டும் என்று இந்த அவையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அது மக்களவையில் நிறைவேறவில்லை. சுமார் இருபதாண்டு காலமாக இந்த நிலை நீடிக்கிறது. பிரநிதித்துவ அமைப்புமுறை வந்துவிட்டால், பின்னர் ஒவ்வோர் அரசியல் கட்சியும் தங்கள் கட்சி சார்பில் மூன்றில் ஒரு பங்கு பெண் உறுப்பினர்களை தேர்ந்தெடுத்திட வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கிட முடியும்.

இரண்டாவது முக்கியமான அம்சம், வாக்காளர்களை பணபலம், புஜபலம், சாதி ரீதியாக வேண்டுகோள்கள், மத ரீதியாக வேண்டுகோள்கள் போன்றவற்றைக் கூறி வாக்குகளைப் பெற மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படும்.

மாறாக மக்கள் தங்கள் வாக்குகளில் சரிபாதி வாக்குகளை, போட்டியிடும் அரசியல் கட்சிகளின் கொள்கைத் திட்டங்களுக்குத்தான் அளிக்கப் போகிறார்கள். தனி நபர்களுக்கான கோரிக்கை என்பது மறு பாதியில்தான் இருக்கிறது.

நம்முடைய ஜனநாயக அமைப்பை மெருகேற்றி பூரணத்துவப்படுத்திட வேண்டும் என்று உண்மையிலேயே நாம் விரும்புவோ மானால் இதனைச் செய்திட முன் வர வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டால், அரசமைப்புச் சட்டம் உருவானதற்குப் பிறகு பிறந்துள்ள நம்முடைய தலைமுறை இதனால் பெருமை கொள்ளும்.

**ஊடகங்கள்**

பணம் கொடுத்து செய்தி போடுவதை விளம்பரமாகக் கருதி, அதனை சம்மந்தப்பட்ட அரசியல் கட்சி அல்லது வேட்பாளரின் கணக்கில் சேர்த்திட வேண்டும். முதலாவதாக இதனை நிறுத்திட முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு காசு கொடுத்து செய்தி வெளியிடும் முறை மீது நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

இரண்டாவது, ஊடகங்கள் மீதான கட்டுப்பாடு குறித்ததாகும். எந்தவொரு பெரிய ஜனநாயக நாட்டிலும் கார்ப்பரேட்டுகள் ஊடகங்கள் மீது ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கப்படுவதில்லை. அங்கெல்லாம் கார்ப்பரேட்டுகள் செய்தித்தாள், தொலைக் காட்சி அலைவரிசைகள் மற்றும் இணைய தளங்கள் மீது ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கப் படுவதில்லை. அதே போன்று சமூக வலைத் தளங்களில் வாட்ஸ்அப் 98 சதவீத அளவிற்கு மக்களிடம் கருத்துக்களைத் திணித்திடப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மீது எந்தக் கட்டுப்பாடும் கிடையாது.

2014இல் கண்டுபிடிக்கப்பட்ட முகநூல், ட்விட்டர் பின்னுக்குக் போய்விட்டன. துகவல் தொழில்நுட்ப காலத்தில் மூன்றாண்டுகள் என்பது ஒரு நீண்ட காலமாகும். இப்போது அவை எல்லாம் பின்னுக்குப் போய்விட்டன.

வாட்ஸ்அப் மீது எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. ஆதன் சாராம்சம் என்ன? அதில் என்ன பரவிக்கொண்டிருக்கிறது? அதன் மூலம் மேற்கொள்ளப்படும் சிதைவுகள் என்னென்ன? இவை அனைத்தைக் குறித்தும் முழுமையாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வாட்ஸ்அப் உதவியுடன் உத்தரபிரதேசத்தில் பாஜக எப்படி வெற்றி பெற்றிருக்கிறது என்பதை முழுமையாக ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும். அது சரியாகவும் இருக்கலாம், தவறாகவும் இருக்கலாம். ஆனால் நம் அரசமைப்புச்சட்டத்தின் நான்காவது தூண் என்று சொல்லப்படுகின்ற ஊடகங்கள் மீது நம் கட்டுப்பாடு என்ன? இவற்றில் கார்ப்ப ரேட்டுகளின் ஆதிக்கத்தை தடை செய்திட வேண்டும். காசு கொடுத்து செய்தி வெளியிடு

வது தொடர்பாக அவ்வாறு செய்திடு பவர்களைத் தண்டிக்கக்கூடிய விதத்தில் புதிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

எலக்ட்ரானிக் ஊடகங்கள் முழுமையாக அவற்றின் உரிமையாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. தூர்தர்ஷனில் தேசிய அரசியல் கட்சிகளுக்கு பேசுவதற்கான வாய்ப்பு அவை பெற்ற வாக்கு சதவீதத்தின் அடிப்படையில் அளிக்கப்படுவதாக சொல்லப்படுகிறது. ஆனால் தனியார் தொலைக்காட்சி அலை வரிசைகளில் என்ன நிலை? அது முழுமையாக பூஜ்யமாகும். இவ்வாறு ஊடகங்களில் நடந்து கொண்டிருப்பவற்றைப் பற்றி ஆழமான முறையில் விவாதித்திட வேண்டியது அவசியமாகும்.

### எலக்ட்ரானிக் வாக்கு எந்திரங்கள்

அடுத்ததாக மின்னணு வாக்கு எந்திரங்கள் (EVMs) குறித்து பேச வேண்டும். இது தொடர்பாக அமெரிக்காவில் தகவல் தொழில்நுட்பத்துறையில் பணியாற்றுபவர்கள் வந்து அவை செயல்படும் விதத்தைச் செய்து காட்டினார்கள். அதில் சில பிரச்சனைகள் இருக்கின்றன. அவற்றைக் களைந்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையமும் கூறியது. பின்னர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தாள்கள் மூலம் சோதனை செய்திட வேண்டும் என்று அனைவரும் ஒப்புக் கொண்டார்கள். அப்போது குரேசி தலைமைத் தேர்தல் ஆணையராக இருந்தார். தாள் சோதனையை (Paper trail) ஏற்றுக்கொண்டார். பின்னர் அது உச்சநீதிமன்றத்திற்குச் சென்றது.

திரு.குரேசி ஊடகங்களிடம் ஒன்றைக் கூறியிருக்கிறார். ‘இது தொடர்வதற்கு நிதி அளிப்பதை அரசாங்கம் நிறுத்திவிட்டது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை” என்று கூறியிருக்கிறார்.

தேர்தல் ஆணையம் என்பது அரசமைப்புச் சட்டத்தின்கீழ் அமைந்துள்ள ஓர் அமைப்பு. இதற்கு அரசாங்கத்துடன் சம்பந்தம் கிடையாது. இதற்கு ஏதேனும் பிரச்சனை என்றால் அதை குடியரசுத் தலைவரிடமோ அல்லது அவரால் அமர்த்தப்பட்டுள்ள அலுவலர்களிடமோதான் தீர்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் அவர் ஆட்சியாளர்களிடம் சென்றிருக்கிறார். இது போன்று முன்னெப்போதும் நடந்ததில்லை. அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யாததால் அவருக்கு வேறு வழி தெரியவில்லை.

1952, 1957, 1962இல் ஒரே சமயத்தில் நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் தேர்தல்கள் நடைபெற்றன. பின்னர் ஏன் தனித்தனியாக நடைபெற வேண்டி இருந்தது? அரசமைப்புச் சட்டத்தின் 356ஆவது பிரிவின்கீழ் கேரள அரசாங்கம் டிஸ்மிஸ் செய்யப்பட்டது. அதன்பின்னர் அதே போன்று பல அரசுகள் டிஸ்மிஸ் செய்யப்பட்டன. எனவேதான் இரண்டையும் ஒன்றாக நடத்த அதன்பின்னர் நேரம் ஒத்துவரவில்லை.

அரசியல் நிர்ணய சபையில் நீண்ட நெடிய விவாதங்களுக்குப் பின்னர் இன்றைய நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறை கொண்டுவரப்பட்டது. இதற்கு இணையாக உலகில் வேறெங்கும் கிடையாது. நம்மைப் போன்று வேற்றுமைகளில் ஒற்றுமை கண்டுள்ள ஒரு நாட்டில், நாடாளுமன்ற ஜனநாயக அமைப்புதான் சிறந்ததோர் அமைப்பாகும்.

அதைத்தான் டாக்டர் அம்பேத்கர் கூறினார். ஒட்டு மொத்த அரசியல் நிர்ணய சபையும் கூறியது. எனவே அவ்வாறு நாம் முடிவிற்கு வந்தோம். அதனை மாற்றி, குடியரசுத்தலைவர் ஆட்சியைக் கொண்டுவர கொல்லைப்புற வழியாக இவர்கள் முயற்சிகளை மேற்கொண் டிருக்கின்றனர். இதனை நாம் ஒருபோதும் அனுமதித்திட முடியாது.

உத்தரப்பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தலில் மதவெறி அடிப்படையில் வாக்காளர்களுக்கு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டிருக்கிறது. ‘கசாப்’ என்றும் ‘கப்ரிஸ்தான்’ என்றும் ‘ஷம்ஷான் காட்’ என்றும் (சுடுகாடு, இடுகாடு) ஈத்துப் பெருவிழா, தீபாவளி பண்டிகை என்றும் நேரடியாகவே மதவெறியை மக்கள் மத்தியில் விசிறிவிடப்பட்டதைப் பார்த்தோம். இவ்வாறு மதவெறியை விசிறி விட்டவர்கள்

யார்? நாட்டின் பிரதமரும், நாட்டை ஆளும் கட்சியின் தலைவருமே இவ்வாறு கூறிய வர்கள். இவ்வாறு இவர்களே மதவெறியைக் கிளப்பிவிடுவார்கள் என்றால். அதற்கு எதிராக எவ்விதமான நடவடிக்கையும் கிடையாது என்றால், நாம் ஜனநாயகம் குறித்துப் பேசிக் கொண்டிருப்பதன் அர்த்தம் என்ன? நாம் ஏன் இந்தியத் தண்டனைச் சட்டத்தைப் பெற்றிருக்கிறோம்? இது குறித்தெல்லாம் நாம் ஆழமான முறையில் பரிசீலனை செய்தாக வேண்டும்.

2014 அக்டோபரில் இந்த அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தேர்தல் சீர்திருத் தங்கள் குறித்து கருத்துக்களைக் கேட்டது. இப்போது 2019 நடந்து கொண்டிருக்கிறது. அவற்றின் மீது எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. இப்போதாவது அவை குறித்து ஆழமாகவும் முறையாகவும் விவாதித்திட, ஒரு கூட்டு நாடாளுமன்றக் குழுவை அமைத்து அதில் சட்ட வல்லுநர் களையும், அரசமைப்புச்சட்ட வல்லுநர்களை யும் முன்னணி அரசியல் தலைவர்களையும் இணைத்து தேர்தல் நடைமுறையை ஆழமான முறையில் சீர்திருத்திட நடவடிக்கைகள் எடுத்திடுவோம். நம் ஜனநாயகத்தைப் பாதுகாத்திட இது மிக மிக அவசியமாகும். ❑




அரசு மருத்துவர்கள் சங்க கூட்டமைப்பு சார்பில் 25.10.2019 அன்று முதல் 4 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 18,000 மருத்துவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை தொடர்ந்து சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களின் நியாயமான கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அழைத்து பேசி தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தியும், போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் 29.10.2019 அன்று சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆ.செல்வம் வாழ்த்தி பேசினார். மாநிலத் தலைவர் மு.அன்பரசு, மாநில நிர்வாகிகள், வடசென்னை, தென்சென்னை மாவட்ட நிர்வாகிகள் உட்பட 50 பேர் நேரில் சென்று போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க 13ஆம் மாநில மாநாடு அறைகூவல் தீர்மானத்தின்படி தமிழகம் முழுவதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் மற்றும் பெருந்திரள் முறையீடு

தஞ்சையில் நடைபெற்ற 13ஆம் மாநில மாநாட்டு அறைகூவல் தீர்மானத்தின்படி, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநிலத் தலைவர் எம்.சுப்பிரமணியன் அவர்கள் ஓய்வுபெறும் நாளில் பழிவாங்கும் நோக்கத்தோடு தற்காலிக பணிநீக்கம் செய்ததை கண்டித்தும், முறையாக ஓய்வுபெற ஆணை வழங்க வலியுறுத்தியும், கரூர் மாவட்ட மருத்துவக் கல்லூரி முதல்வர் பழிவாங்கும் நோக்கத்தோடு 5 பேரை பணிநீக்கம் செய்துள்ளதை ரத்து செய்யக் கோரியும், கோவை மாவட்ட அரசு ஊழியர் சங்க தலைவர் வே.செந்தில்குமார் உள்ளிட்ட 4 சங்க நிர்வாகிகளை அரசியல் நிர்பந்தத்தின் காரணமாக வேறு மாவட்டத்துக்கு மாற்றப்பட்டுள்ளதைக் கண்டித்தும், மீண்டும் அதே இடத்தில் பணியமர்த்த வேண்டும் எனவும் வலியுறுத்தியும்,

மேலும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும், புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், தொகுப்பூதியம், மதிப்பூதியம், வெளிமுகமை முறைகளை மாற்றக் கோரியும், 21 மாத நிலுவைத் தொகையை வழங்க வேண்டும், ஊழியர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கையை கைவிட வேண்டும் என வலியுறுத்தி மாநிலம் முழுவதும் 11.10.2019 அன்று மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்து தமிழக முதல்வருக்கு பரிந்துரை செய்ய வலியுறுத்தி பெருந்திரள் முறையீடு அளிக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. அதன்படி

## கிருட்டினகிரி

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு நடைபெற்றது. மாவட்ட தலைவர் பி.சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் ஆர்.நடராஜன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். தோழமை சங்க நிர்வாகிகள் என்.பிரதாப், எம்.சரவணன், எஸ்.சின்னப்பன், எம்.திம்மராஜ், சி.கல்யாண சுந்தரம், ஜெயலட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட பொருளாளர் வி.தேவராஜ் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் 14 பெண் ஊழியர்கள் உட்பட 102 பேர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்ட முடிவில் மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து முறையீட்டு மனு அளித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு பரிந்துரை செய்ய கேட்டுக் கொண்டனர்.

## தருமபுரி

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாநில துணைத் தலைவர் ஜி.பழினியம்மாள், மாவட்ட செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் பி.எஸ்.இளவேனில் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.

துறைவாரி சங்க நிர்வாகிகள் ஆர்.ஆறுமுகம், என்.ருத்ரையன், எம்.சிவப்பிரகாசம், சி.எம்.நெடுஞ்செழியன், ஆர்.ஜெயவேல் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

## பெரம்பலூர்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டத் தலைவர் சா.இளங்கோவன் தலைமையில் ஆர்ப்பாட்டம் மற்றும் பெருந்திரள் முறையீடு நடத்திடப்பட்டது. மாவட்ட நிர்வாகிகள், துறைவாரி சங்க நிர்வாகிகள் மற்றும் அனைத்துத் துறை ஊழியர்கள் கலந்துகொண்டனர். மாவட்டச்

செயலாளர் ப.குமரிஅனந்தன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாவட்ட நிர்வாகிகள் சிவகுமார், மகேந்திரன், பெரியசாமி, கொளஞ்சி, சரவணசாமி, பால்பாண்டி ஆகியோர் பேசினர். இறுதியாக மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களிடம் கோரிக்கை மனு வழங்கப் பட்டது. மாவட்ட பொருளாளர் இராஜராஜன் நன்றி கூறினார்.

### கரூர்

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் தோழர்.கே.சக்திவேல் தலைமையில் நடைபெற்றது. துறைவாரி சங்க நிர்வாகிகள் தமிழ்வாணன், பொன்.ஜெயராம், ஆர்.தாமோதரன், அ.ஜீவானந்தம், எம்.செல்வராணி, வி.டி.இராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் துணைத் தலைவரும், தமிழ்நாடு அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் மாநிலத் தலைவரு மான மு.சுப்பிரமணியன் நிறைவுரை யாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் ஆர்.கண்ணன் நன்றியுரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் என 50க்கும் மேற்பட்ட பெண் ஊழியர்கள் உட்பட 140 பேர் கலந்து கொண்டனர்.

### விருதுநகர்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் விருதுநகர் மாவட்ட அமைப்பாளர் கருப்பையா தலைமையில் நடைபெற்றது. கோரிக்கைகளை விளக்கி மாவட்ட அமைப்புக் குழு உறுப்பினர் கோவிந்தன், துறைவாரி சங்க நிர்வாகிகள் செய்யது உசேன், சுந்தரமூர்த்தி, சுந்தரம், செல்வராஜ், திருமூர்த்தி, கருமலை, தவசிலிங்கம், ரகமத்துல்லா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க பொதுச் செயலாளர் செல்வம் சிறப்புரையாற்றினார். முடிவில் அமைப்புக் குழு உறுப்பினர் ராமச்சந்திரன் நன்றி கூறினார்.

### நாகப்பட்டினம்

மாவட்டத் தலைவர் து.இளவரசன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் கோரிக்கைகளை விளக்கி பேசினார். சீர்காழி வட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வன், துறைவாரி சங்க நிர்வாகிகள் வி.மோகன், வி.தேன்மொழி, செ.பிச்சைபிள்ளை, எஸ்.ஜோதிமணி, எம்.பி.குணசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நெடுஞ்சாலைத் துறை சாலைப் பணியாளர் சங்கத்தின் வி.கணேசன் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன் சேரல் நன்றி கூறினார். 45 பெண்கள் உட்பட 200-க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்ட முடிவில் மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியர் பிரவின் கே நாயர் அவர்களை சந்தித்து முறையீடு அளிக்கப்பட்டது.

### திருவாரூர்

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பிறகு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களிடம் மாவட்ட தலைவர் எம்.ராஜமாணிக்கம் தலைமையில், மாநில செயலாளர் உ.சண்முகம் முன்னிலையில் மாவட்ட நிர்வாகிகளால் பெருந்திரள் முறையீடு வழங்கப்பட்டது.

### தஞ்சாவூர்

மாவட்டத் தலைவர் சா.கோதண்டபாணி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஆ.ரெங்கசாமி கோரிக்கை விளக்கவுரையாற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் சா.தமிழ்வாணன், சோமநாதராவ் உள்ளிட்ட பலர் வாழ்த்தி பேசினர். பின்னர் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

### மதுரை

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட துணைத் தலைவர் து.முருகன்

தலைமையில் பெருள்திரள் முறையீடு - ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் க.நீதிராஜா கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.

முன்னாள் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன், ஜாக்டோ-ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மு.சந்திரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநில துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளார் மு.ராம்தாஸ் நன்றி கூறினார்.

### திண்டுக்கல்

மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் முறையீடு தலைமை மாவட்ட துணைத் தலைவர் வீரகடம்புகோபு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் முபாரக் அலி விளக்கவுரையாற்றினார். ஊரக வளர்ச்சித் துறையின் ராஜசேகர், வருவாய் துறை அலுவலர்கள் சங்கத்தின் சுகந்தி, அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கத்தின் தமிழ் செல்வி, சத்துணவு ஊழியர் சங்கத்தின் ராமு ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநில துணைத் தலைவர் மங்களபாண்டியன் சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார். பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் முறையீடு அளிக்கும் வகையில் அனைவரும் சென்று அளித்து தமிழக முதல்வருக்கு அனுப்ப வழியுறுத்தப்பட்டது. ❑

---

# தெலுங்கானா போக்குவரத்து ஊழியர்களுக்கு ஆதரவாக அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

**தெ**லுங்கானா மாநிலத்தில் போராட்டம் நடத்திய போக்குவரத்து ஊழியர்களை பணி நீக்கம் செய்த அம்மாநில அரசின் செயலுக்கு கண்டனம் தெரிவித்தும், பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை மீண்டும் பணியமர்த்தியும், போராடும் போக்குவரத்து ஊழியர் சங்க தலைவர்களை அழைத்து பேசி பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் என வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில முடிவின்படி தமிழகம் முழுவதும் 23.10.2019 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### மதுரை

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட இணைச் செயலாளர் இ.முருகன் தலைமையில் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் தோழர் க.நீதிராஜா கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாநிலப் பொருளாளர் விஜயபாஸ்கர், TNPGTA மாநில பிரச்சார செயலாளர் உக்கிரபாண்டியன் ஆதரவு உரையாற்றினர். பொதுச்செயலாளர் ஆ.செல்வம் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் மு.ராம்தாஸ் நன்றியுரையாற்றினார். 6 பெண்கள் உட்பட 72 பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### வடசென்னை

குறளகம் வளாகத்தில் மாவட்டத் தலைவர் ப.சுந்தரம்மாள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ம.அந்தோணிசாமி கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாநில துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி கண்டன உரையாற்றினார். குறளகம் பகுதி செயலாளர் ஆ.கோபிநாதன் நன்றி கூறினார்.

### கிருட்டினகிரி

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் எதிரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் பி.சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் ஆர்.நடராஜன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் என்.பிரதாப், எம்.சரவணன், தினேஷ், ஜி.வெங்கடேஷ், சி.கல்யாணசுந்தரம்,

வி.தேவராஜ், எம்.திம்மராஜ், எஸ்.முருகேசன் ஆகியோர் போராட்டத்தை ஆதரித்து உரையாற்றினர். சத்துணவு ஊழிய சங்க மாநில செயலாளர் ஆர்.எம்.மஞ்சுளா சிறப்புரை யாற்றினார். வட்ட செயலாளர் ஏ.மணி நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் 8 பெண்கள் உட்பட 65 பேர் கலந்து கொண்டனர்.

## தருமபுரி

மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநில துணைத் தலைவர் ஜி.பழனியம்மாள் சிறப்புறையாற்றினார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர். மாவட்ட மகளிர் துணைக்குழு மாவட்ட அமைப்பாளர் பி.எஸ்.இளவேனில், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் என்.ராமஜெயம், ஆர்.ருத்ரையன், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் சி.எம்.நெடுஞ்செழியன், சி.காவேரி ஆகியோர் வாழ்த்திபேசினர்.

## நாகப்பட்டினம்

மாவட்டத் தலைவர் து.இளவரசன் தலைமையில் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். ஊரக வளர்ச்சி த்துறை அலுவலர் சங்க மாவட்ட துணைத் தலைவர் எஸ்.ஜோதிமணி ஆதரவு உரையாற்றினார். நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் நிறைவுரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் கே.இராஜூ நன்றியுரை யாற்றினார். 15 பெண்கள் உட்பட 100 பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## திண்டுக்கல்

மாவட்ட செயலாளர் முபாரக் அலி தலைமையில் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்க மாவட்ட துணைத் தலைவர் ராஜாமணி வருவாய் துறை அலுவலர்கள் சங்க மாவட்ட செயலாளர் சுகந்தி வாழ்த்துரை வழங்கினர் மாநில துணைத் தலைவர் மங்களபாண்டியன் சிறப்புரை ஆற்றினார் மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

## கரூர்

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் ஆர்.தாமோதரன், தமிழ்நாடு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் ஆர்.கண்ணன், தமிழ்நாடு ஆய்வக நுட்புனர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் எம்.செல்வராணி, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் துணைத் தலைவரும், தமிழ்நாடு அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் மாநிலத் தலைவருமான மு.சுப்பிரமணியன் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொரு ளாளர் பொன்.ஜெயராம் நன்றியுரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத் துணைத் தலைவர் கே.செல்லமுத்து, மாவட்ட இணைச் செயலாளர் கே.கருணாகரன், வட்டக்கிளை நிர்வாகிகள் அறிவழகன், பாலசுப்பிரமணி, லட்சுமணன், செல்வன், இளங்கோ, உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் 6 பெண் ஊழியர்கள் உட்பட 42 பேர் கலந்து கொண்டனர். ❑

**இரவு நேரங்களில் அதிக நேரம் தொலைக்காட்சியை பார்ப்பது கண்ணுக்கு நல்லதல்ல.**

**இரத்த தானம், கண் தானம், உடல் தானம் செய்து உயிருக்கு போராடும் உயிர்களைக் காப்போம்!**

# தமிழ்நாடு அமைப்பு தினமும், தமிழ் வளர்ச்சி தினமும்!

*நவம்பர் 1*

தமிழ்நாடு அமைப்பு தினமாக தமிழக அரசு அனுசரிக்கும் நாளிது. இதே நாளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் வளர்ச்சி நாளாக மாநிலம் முழுவதும் பல்வேறு வடிவங்களில் நிகழ்ச்சிகள் நடத்தி அனுசரிக்கிறது.

மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை மாற்றி தமிழ்நாடு என்ற பெயர் சூட்டுவதற்கு தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாள் ஜூலை 18. 50 ஆண்டுகள் நிறைவுற்று தமிழக அரசு பொன்விழாவை அனுசரித்து விழா எடுத்தது. இந்நாளில் தமிழ்நாடு என்ற பெயருக் காகவும் தமிழை ஆட்சிமொழியாக்கவும் கம்யூ னிஸ்டுகள் ஆற்றிய பங்கினை நினைவுகூர்தல் அவசியம்.

1952ம் ஆண்டில் சென்னை சட்டமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியான கம்யூனிஸ்ட் கட்சி தனது உறுப்பினர்களை அவரவர் தாய்மொழியி லேயே பேசும்படி கூறியது. அதுவரை ஆங்கிலத் திலேயே உரை நிகழுத்தப்பட்டு வந்த சென்னை சட்டமன்றத்தில் முதன்முறையாக தமிழ், தெலுங்கு மற்றும் மலையாள மொழிகள் பேசப்பட்டன. அதுமட்டுமல்ல. வரவு செலவு (பட்ஜெட்) திட்டம் குறித்து மாநில மொழிகளில் பேச இயலாது. ஆங்கிலத்தில்தான் பேசமுடியும் என்றிருந்த நிலைமையை எதிர்க்கட்சித் தலைவர் பி.ராமமூர்த்தி மாற்றினார். 1953ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டம் மீது உரை நிகழ்த்தி அவர் முழுக்க முழுக்க தமிழிலேயே பேசினார். அந்த உரையைக் கேட்ட அன்றைய நிதியமைச்சர் சி.சுப்ரமணியம் வரவு செலவு திட்டத்தின்மீது தமிழிலும் பேச முடியும் என ராமமூர்த்தி நிரூபித்துவிட்டார் என பாராட்டிப் பேசினார். கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவா "நான் தமிழன், எனது மொழியே இங்கு ஆட்சி மொழியாக இருக்க வேண்டும், தமிழ் மொழியே நீதிமன்ற மொழி யாக, போதனா மொழியாக இருக்க வேண்டும். இதுதான் ஜனநாயகத்தின் முதல் படி. தமிழ் தெரிந் தால் போதும், இந்த நாட்டின் ஆட்சியாளராக ஆகலாம். கல்லூரிப் பேராசிரியர் ஆகலாம் எனும் காலம் வரவேண்டும்" எனப் பேசினார்.

1950-60ம் ஆண்டுகளில் நடைபெற்ற இரண்டு முக்கிய நிகழ்வுகளை இங்கே குறிப்படுவது அவசியம். 1956ம் ஆண்டில் தமிழகத்தில் சென்னை மாகாணத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிட வேண்டும் எனக்கோரி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த விருதுநகர் தேசபக்தர் தியாகி சங்கரலிங்கனார் தான் மரணம் அடையும் முன் அதிகாரிகளிடம் கூறியது "நான் இறந்தபின் எனது உடலை கம்யூனிஸ்ட்களிடம் கொடுக்க வேண்டும்" என்பதாகும். அதேபோல் அவர் இறந்தவுடன் அவரது உடல் மதுரை கம்யூனிஸ்ட் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் அவரின் இறுதி நிகழ்ச்சியைச் செய்தனர்.

இரண்டாவது நிகழ்வு..1962ஆம் ஆண்டில் முதன்முறையாக இந்திய நாடாளுமன்றத்தில் சென்னை மாகாணத்திற்குத் 'தமிழ்நாடு ' என்று பெயரிட வேண்டும் என்ற தீர்மானம் முன்மொழி யப்பட்டது. இதை மாநிலங்களவையில் முன் மொழிந்தார் கம்யூனிஸ்ட் தலைவர் பி.ராம மூர்த்தி. ஆனால் அந்தத் தீர்மானம் விவாதத்திற்கு வந்தபோது அவர் கடலூர் சிறையில் பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டிருந்தார். எனவே அவர் சார்பில் கம்யூனிஸ்ட் தலைவர் பூபேஷ்குப்தா பி.ராமமூர்த்தி சிறையிலிருப்பதை உருக்கமாகக் குறிப்பிட்டு, அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து நீண்டதொரு உரையாற்றினார்.

1967ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர்கள் 11 தோழர்கள் இடம் பெற்றிருந்தனர். அண்ணா முதலமைச்சர் பொறுப்பேற்றதும் மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை அடியோடு மாற்றி தமிழ்நாடு என்ற பெயரை சூட்டவேண்டுமென முடிவு செய்யப் பட்டது. ஜூலை 18 அன்று முதல்வர் அண்ணா தீர்மானம் கொண்டு வந்தார். கம்யூனிஸ்டுகளின் ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு வாழ்க என வாழ்த்துவோம் என்று கூறி 'தமிழ்நாடு' என்று மூன்று முறை முழங்கினார். அவரைத் தொடர்ந்து அனைத்து உறுப்பினர்களும் வாழ்க என்று மூன்று முறை குரல் எழுப்பினர். இதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1969 ஜனவரி 14 அன்று சென்னை மாநிலம் தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது.

1947ல் நாடு விடுதலை அடைந்தபோது மதராசு மாகாணம் மதராசு மாநிலம் ஆனது. ஆனால்

1948ஆம் ஆண்டு வரை புதுக்கோட்டை சமஸ்தானம் தொண்டைமான் மன்னர்களின் ஆட்சியின் கீழ் இருந்தது. இதுவே இந்தியாவோடு சேர்ந்த கடைசி சில சமஸ்தானங்களுள் ஒன்றாகும். தமிழ்நாடு கடலோர ஆந்திரப் பகுதிகள், மேற்கு கேரளம், தென்மேற்கு கர்நாடக கடற்கரைப் பகுதிகள் ஆகியவை மதராசு மாநிலத்தின் கீழ் வந்தன. 1953ல் மதராசு மாநிலத்தின் தெலுங்கு பேசும் வடபகுதிகள் ஆந்திர மாநிலமாகவும், தமிழ் பேசும் தென்பகுதிகள் மதராசு மாநில மாகவும் மேலும் பிரிக்கப்பட்டது. 1956ல் மாநில எல்லைகளை மறு வரையறை செய்யும் சட்ட திருத்தத்தின் மூலம் மதராசு மாநிலத்தின் மேற்கு கடற்கரை பகுதிகள் கேரளாவிற்கும் கர்நாடகத் திற்கும் இடையே பிரித்தளிக்கப்பட்டது. 1969ல் மதராசு மாநிலத்திற்கும் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. திருவாங்கூர் கொச்சி மாநிலத்தின் தென்பகுதியில் தமிழ் பேசும் மக்கள் வாழிடம் கன்னியாகுமரி மாவட்டமாக உருவாக் கப்பட்டு நவம்பர் 1..1956ல் தமிழகத்தோடு இணைந்தது. அன்று தமிழ்நாடு எல்லை முழுமை பெற்றதன் அடையாளமாக நவம்பர் 1ஐ தமிழ்நாடு தினமாக தமிழக அரசு தற்போது அனுசரிக்கிறது.

இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப் பேற்ற நாள் முதலாக மத்திய அரசு மாநிங்களில் இந்தியைத் திணிக்கும் வேலைகளை குயுக்தியான முறையில் செய்து வருகிறது. மத்திய பொதுப் பட்டியலில் கல்வி உள்ள நிலையில் மருத்துவம் உள்ளிட்ட உயர் கல்வி மாநில மொழியில் பயிற்றுவிக்கத் தடையாக உள்ளது. ஏழை எளிய மக்களின் குழந்தைகள் கல்வி பெறும் அரசுப் பள்ளிகளை மூடவும் தாய்மொழியில் கல்வி பயில்வதற்கு வேட்டு வைக்கவும் சமூக ஆர்வலர்கள் என்ற பெயரில் இந்துத்துவா பிற்போக்குக் கொள்கைகளை பிஞ்சு மனங்களில் நஞ்சென விதைக்க வழி வகுக்கும் தேசிய கல்விக் கொள்கைக் கெதிராக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய கையெழுத்தியக்கம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் திருச்சியில் நடத்திய மாநிலந் தழுவிய கருத்தரங்கம் குறிப்பிடத்தக்க எதிர்ப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. ஆனால் அவற்றையெல்லாம் உதாசீனப்படுத்திவிட்டு தேசிய கல்விக் கொள்கை 2019ஐ தானடித்த மூப்பாக அமுல்படுத்த மத்திய அரசு துவங்கி விட்டது. இந்திய நாட்டின் ஆன்மாவான கிராமப் பள்ளிகளை மூடிவிட்டு கல்வி நிறுவனங்களை கார்ப்பரேட் மயமாக்கத் தயாராகிவிட்டது மத்திய அரசு. மாநிலங்களின் தாய்மொழியைப் புறந்தள்ளி இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிக்க தேசிய கல்விக் கொள்கையைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்துகிறது மத்திய அரசு. இதை எதிர்க்கத் துணிவின்றி தமிழக அரசு மத்திய அரசின் ஊதுகுழலாக செயல்பட்டு வருகிறது. எனினும் தமிழகத்தில் நடைபெற்று வரும் எதிர்ப்பியக்கங்களின் விளைவாக உடனடியாக தேசிய கல்விக் கொள்கையை அமுல்படுத்த இயலாமல் மாநில கல்வித்துறை அமைச்சர் செங்கோட்டையன் சில முடிவுகளை அறிவிப்ப தும் ஒத்திவைப்பதுமாக உள்ள நிலையில் மாநில அரசு கைபிசைந்து கிடக்கிறது.

உயர்நீதிமன்றங்களில் அந்தந்த மாநில மொழியை வழக்காடு மொழியாக்காமல் ஆங்கிலமே ஆதிக்கம் புரிந்து வருகிறது. நீதிமன்றத்தில் தமது வழக்கு எவ்வாறு நடக்கிறது என்பதை ஆங்கிலமறியா பாமரர்கள் புரிந்து கொள்ள இயலாத நிலையில் அடிப்படை உரிமை பறிக்கப்படுகிறது. மெட்ராஸ் ஹைகோர்ட் என்பதை சென்னை உயர்நீதிமன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யக்கூட ஒப்புதலளிக்க இசைவு தராத அவல நிலையே மத்தியில் நீடிக்கிறது. மாநிலத் தில் தமிழ்வழிக் கல்வியை ஊக்குவிப்பதில் கிஞ்சிற்றும் சிந்தனையோ அக்கறையோ இல்லாத அரசாகத்தான் தமிழக அரசு உள்ளது. இவற்றில் எல்லாம் மாற்றம் காணாமல் ‘தமிழ்நாடு பொன்விழா’ கொண்டாட்டத்தால் பெரிய பலன்கள் வந்துவிடப் போவதில்லை என்பதை கடந்த கால அனுபவம் நிரூபித்தது.

அதேபோன்று நவம்பர் 1ஐ தமிழ்நாடு அமைப்பு தினமாக தமிழக அரசு அனுசரிப்பதால் எந்த மாற்றமும் வந்துவிடப் போவதில்லை. ஆனால் தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகவும் தொன்மை மிக்க தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தமிழ்ச் சமூகம் ஒன்றுபட்டுப் போரட வேண்டி யுள்ளது. தொன்மை மிக்க தமிழர் நகர நாகரிகமும் சாதிமதமற்ற சமூக அமைப்பும் 2600 ஆண்டு களுக்கு முன்பே இருந்ததற்கான சாட்சியாய் கீழடி தொல்லியல் ஆய்வுகள் மிளிர்கின்றன. இதை மூடி மறைக்க மத்திய அரசு எத்தனை குறுக்குசால் ஓட்டியது என்பதை நாடறியும்.

தமிழக மக்களும் அடிப்படையிலேயே தெளிவுபட வேண்டியுள்ளது. தாய்மொழி சுவாசமொழி. தமிழில் பிள்ளைகள் பேசுவதும்

உரையாடுவதுமே கௌரவக் குறைச்சலாகி ஆங்கிலத்தில் பேசுவதையே உயர்வாகக் கருதும் பிற்போக்கு எண்ணம் பாய்ச்சல் வேகத்தில் பயணிக்கிறது. இது ஆபத்தானது. தமிழ்வழிக் கல்வி பயில்வோருக்கு உயர்கல்வியிலும் வேலையிலும் முன்னுரிமை வழங்குவதோடு தமிழ்வழிக் கல்வி பயில்வோர்க்கு ஊக்கத் தொகை வழங்கி ஊக்குவிக்கும் நடவடிக்கையை அரசும் மேற்கொள்ள வேண்டியது காலத்தின் அவசியம். தமிழ்நாட்டு மக்கள்..குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினர் பேசும் மொழியில் முக்கால்பங்கு ஆங்கிலமே கலந்து தாய்மொழிக்கு நஞ்சூட்டும் பணி அரங்கேறி வருவது வேதனை அளிக்கிறது. 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்பதற்கு தமிழர்களே காரணமாகிவிடக் கூடாது. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" எனும் மகாகவி பாரதி உலகுக்கு உணர்த்தியதை மீண்டும் உரத்துச் சொல்லவும் அத்தகைய அமுதமெனும் தமிழின் வளர்ச்சிக்காக தொடர்ந்து இயங்கிட இந்நாளில் உறுதி ஏற்போம். ❑

## 13வது மாநில மாநாட்டு வரவேற்புக் குழு நிறைவுக் கூட்டம்






**த**மிழ்நாடு அரசு ஊழிய சங்கத்தின் 13ஆம் மாநில மாநாடு 2019 செப்டம்பர் 27, 28, 29 ஆகிய தேதிகளில் தஞ்சாவூரில் நடைபெற்றது. இம்மாநில மாநாட்டிற்காக அமைக்கப்பட்டிருந்த வரவேற்புக்குழுவின் நிறைவுக் கூட்டம் 19.10.2019 அன்று தஞ்சையில் நடைபெற்றது. வரவேற்புக்குழு தலைவர் இரா.தமிழ்மணி தலைமை தாங்கினார். வரவேற்புக்குழு துணைத்தலைவர் எம்.என்.சாந்தாராமன் வரவேற்றார். மாநில மாநாட்டு நிகழ்வுகள் தொடர்பான அறிக்கையினை வரவேற்புக்குழு செயலாளர் ஆ.ரெங்கசாமி வாசித்தார். மாநாட்டிற்கான வரவு - செலவு அறிக்கையினை வரவேற்புக்குழு பொருளாளர் சா.கோதண்டபாணி வாசித்தார். மாவட்டச் செயலாளர்கள் ஏ.டி.அன்பழகன் (நாகை), ஆர்.ரெங்கசாமி (புதுக்கோட்டை), கே.நீதிராஜா (மதுரை), மாவட்டத் தலைவர்கள் ராஜமாணிக்கம் (திருவாரூர்), சா.டேனியல் ஜெயசிங் (தென்சென்னை), முன்னாள் மாநில பொருலாளர் எம்.தங்கராஜ், முன்னாள் மாநில துணைத்தலைவர் எஸ்.சிவக்குமார், கே.எம்.தியாகராஜன், நெடுஞ்சாலைத்துறை ஊழியர் சங்க முன்னாள் மாநிலத் தலைவர் பி.சக்திவேல், அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாவட்டத் துணைத் தலைவர் பழ.அன்புமணி, இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத்தின் தஞ்சை கோட்டப் பொதுச் செயலாளர் செல்வராஜ், மாநில மகளிர் துணைக்குழு உறுப்பினர் எஸ்.செல்வி ஆகியோர் கருத்துரை வழங்கினர். முன்னாள் மாநிலச் செயலாளர் இரா.பன்னீர்செல்வம் மற்றும் எம்.சௌந்தரராஜன் ஆகியோர் மாநாட்டுப் பணிகள் குறித்தும் வரவேற்புக்குழு தோழர்களை வாழ்த்தியும் உரையாற்றினர். பொதுச் செயலாளர் ஆ.செல்வம் சிறப்புரை ஆற்றினார். வரவேற்புக்குழு தோழர்களை கௌரவித்தும் நினைவுப் பரிசுகள் வழங்கியும் மாநிலத் தலைவர் மு.அன்பரசு நிறைவுரை ஆற்றினார். மாவட்டப் பொருளாளர் கே.பாஸ்கரன் நன்றி கூறினார். இக்கூட்டத்தில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட அனைத்து மாநில நிருவாகிகளும் பங்கேற்று சிறப்பித்தனர். இக்கூட்டத்தில் 45 பெண்கள் உட்பட 165 பேர் பங்கேற்றனர். ❑

## துறைவாரி சங்க நிகழ்வுகள்

### தமிழ்நாடு அரசு புள்ளிஇயல் சார்நிலை அலுவலர் சங்கம்

*சங்கத்தின் அமைப்பு தின கருத்தரங்கம் 05.10.19 அன்று மதுரை உலக தமிழ்ச் சங்கத்தில் மாநில தலைவர் ப.அந்துவன்சேரல் தலைமை*



*யில் நடைபெற்றது. மாநில இணைச் செயலாளர் என்.நடராஜன் வரவேற்புரை யாற்றினார். முனைவர் கா.பால்பாண்டி தொகுத்த "பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் திட்டப் பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசு புள்ளிஇயல் சார்நிலை அலுவலர் சங்கம் வரலாறு" நூலை முன்னாள் மாநில பொதுச் செயலாளர் ஆர்.சீனிவாசன் வெளியிட கூடுதல் இயக்குநர் சின்னமாரி பெற்றுக் கொண்டார். அமைப்பு தின கருத்தரங்கத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆ.செல்வம், மாவட்டச் செயலாளர் நீதிராஜா வாழ்த்துரை வழங்கினர். மாநில துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன் அறிமுக உரை யாற்றினார். சங்கத்தின் அமைப்பு தினம் குறித்து சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பொ.கண்ணதாசன் விளக்கவுரையாற்றினார். "துறை திட்டங்களும் பயன்பாடுகளும்" குறித்து முன்னாள் மாநில தலைவர் முனைவர் சு.கிருஷ்ணன் கருத்துரை வழங்கினார். "சங்க வரலாறும் எதிர்கால கடமையும்" என்பது குறித்து முன்னாள் பொதுச் செயலாளர் ஆர்.சீனிவாசன், "கணக்கெடுப்புகளும் நமது தேவையும்" குறித்து சரவணகுமார் கருத்துரை வழங்கினர். இறுதியாக மாநில செயற்குழு உறுப்பினர் வேலுச்சாமி நன்றி கூறினார். அமைப்பு தின கருத்தரங்கத்தில் மாநில நிர்வாகிகள் முரளிதரன், நாராயணன், முனைவர் கா.பால்பாண்டி, அற்புதராஜ் ரூஸ்வெல்ட், முகிலன், செந்தமிழ்சேரன், ரமேஷ், மாவட்ட புள்ளிஇயல் துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், முன்னாள் மாநில நிர்வாகிகள், ஓய்வு பெற்ற இத்துறை ஊழியர்கள், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், திருப்பூர், சேலம், திருச்சி மாவட்ட நிர்வாகிகள், மதுரை மண்டல ஊழியர்கள் 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.*

### நகராட்சி ஊழியர் சங்கம்

*கொடைக்கானல் நகராட்சி அலுவலகம் முன்பு நகராட்சி ஊழியர்கள் சார்பாக தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடி மரம் நடப்பட்டு கொடி ஏற்றப்பட்டது வட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.*




### தமிழ்நாடு வணிகவரி பணியாளர் சங்கம்

*சங்கத்தின் 59வது அமைப்பு தினத்தினை முன்னிட்டு மதுரை வணிகவரி வளாகத்தில் சங்க கொடியினை மாவட்ட செயலாளர் யத்தீஸ்வரனும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியினை அரசு ஊழியர் சங்க மதுரை மாவட்டச் செயலாளர் நீதிராஜா ஏற்றி வைத்தனர். இந்நிகழ்வினைத் தொடர்ந்து ஆதரவற்ற ஏழைச் சிறார்களுக்கு புத்தாடைகள், இனிப்பு மற்றும் பட்டாசுகள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆ.செல்வம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.*



## தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம்

சங்கத்தின் தர்மபுரி மாநில பிரதிநிதித்துவப் பேரவை முடிவின்படி தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க நாகை மாவட்ட போராட்ட ஆயத்த மாநாடு 16.10.19 அன்று நாகப்பட்டினம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கூட்ட அரங்கில் மாவட்டத் தலைவர் வி.தேன்மொழி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட இணைச் செயலாளர் என்.இராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் கே.இராஜு கோரிக்கை விளக்கவுரை மாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் துவக்கவுரையாற்றினார்.

மாவட்ட நிர்வாகிகள் என்.புகழேந்தி, எம்.இளங்கோ, வி.ரேனுகா, கே.பாலாம்மாள்



மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கே.சண்முகம், வி.ஜெயராமன், சி.கலியபெருமாள், எஸ்.முருகையன், சி.ஜோதிலெட்சுமி ஆகியோர் கருத்துரையாற்றினர். வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் து.இளவரசன் வாழ்த்துரை வழங்கினார். மாநில துணைத் தலைவர் ஜெ.சசிகலா நிறைவுரை யாற்றினார். மாவட்டப் பொருளாளர் எஸ்.துர்க்காம்பிகா நன்றியுரையாற்றினார். ❑

## சந்திப்புகளும் முறையீடுகளும்

தஞ்சையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களையும், மாண்புமிகு தமிழக முதல்வரை நேரில் சந்தித்திட நேரம் ஒதுக்கீடு தருமாறு கோரிய கடிதங்களை முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை செயலாளர், பொதுத்துறை செயலாளர் ஆகியோரது அலுவலகத்தில் 9.10.2019 அன்று கொடுக்கப்பட்டது.

ஊழியர் - மக்கள் சந்திப்பு இயக்கம் 11.11.2019 முதல் 15.11.2019 வரை தமிழகம் முழுவதும் 5 முனைகளிலிருந்து பிரச்சாரம் நடைபெறவுள்ளதையொட்டி அனுமதி கடிதத்தினை 29.10.2019 அன்று காவல் துறை தலைவர், சென்னை மாநகர ஆணையாளர் ஆகியோரை சந்தித்து கொடுக்கப்பட்டது.

மீன்வளத் துறையில் பணிபுரியும் தோழர் மகாராஜன் மற்றும் ராஜ்குமார் அவர்களின் பழிவாங்கும் பணி மாறுதல் ஆணையை ரத்து செய்திட வலியுறுத்தி மீன்வளத் துறை இயக்குநரை 30.10.2019 அன்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி முறையீடு செய்யப் பட்டது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் சார்பாக முன்னாள் மாநிலத் தலைவர் மு.சுப்ரமணியன் அவர்களின் தற்காலிக பணி நீக்கத்தினை ரத்து செய்திடக் கோரியும், கோவை மாவட்டத் தலைவர் செந்தில்குமார் உள்பட 4 பேரின் மாவட்ட மாறுதல் ஆணையை ரத்து செய்திடக் கோரியும், மாநில பொருளாளர் மு.பாஸ்கரன் அவர்களின் பணியிறக்க ஆணையை ரத்து செய்திடக் கோரி ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களை 30.10.2019 அன்று சந்தித்து முறையீடு அளித்து வலியுறுத்தப்பட்டது. ❑

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com